# விடுதலைப்புலிகள்

குரல் 81 · மாசி, பங்குனி - 1998 · அன்பளிப்பு: 5/=



உள்ளே

- △ பொன்னான வாய்ப்பு
- △ உடைந்துபோன ஒப்பந்தமும் உறுதிதளராத புலிகளும்
- △ சந்திரிகாவின் ஒப்புதல் வாக்குமூலம்: ஒரு புதுவகைத் தந்திரம்
- △ களத்திலிருந்து ஒருகுரல்
- △ நில அபகரிப்புக்காக கிராமப் படுகொலைகள்
- △ உலைக்களம்


## போரின் விரிவாக்கத்தால்

# அரசியல் - பொருண்மிய சிக்கலுக்குள் சிக்கித்தவிக்கும் சிங்கள அரசு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்குடன், சந்திரிகா அம்மையார் இருவகைத் தந்திரோபாய அணுகுமுறைத்திட்டத்தை வரைந்து - நடைமுறைப்படுத்தினார். தீர்வுத்திட்ட அணுகுமுறை - போர்த்திட்ட அணுகுமுறை என்ற அந்த இரண்டுமுக அணுகுமுறைகளிலும் சந்திரிகா அரசாங்கம் தோல்வியையே சந்தித்து வருகின்றது.

தமிழர்தேசியத்தின் ஆணிவேர்களையே அறுத்தெறியும் நாசகார நோக்கத்தைக் கொண்ட சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தையே சிங்களத்து அரசியல் சக்திகள் நிராகரித்த செய்தி மேற்குலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. தமிழ்மக்களின் தேசிய இனச்சிக்கலை தீர்த்துவைக்க விரும்பாத இனவெறிப்பரிமாணங் கொண்ட சிங்களதேசத்தின் அரசியல் உளவியலை அது பகிரங்கப்படுத்தியுள்ளது. சந்திரிகாவின் தீர்வுத்திட்ட தந்திரோபாயம் இறுதியில் செத்தேவிட்டது.

இதேவேளை, அவரின் போர்த்திட்ட அணுகுமுறையும் இமாலய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.

சந்திரிகா - ரத்வத்த குழுவினரின் இராணுவக் கணிப்புகள் மற்றும் அரசியல் தீர்க்கதரிசனங்கள் எல்லாவற்றையும் பொய்யாக்கியபடி போர் விரிவாக்கம் கண்டு வருகின்றது.

வன்னியூடாக ஒரு விநியோகப் பாதை சமைத்து - விடுதலைப் போரை நசுக்கிவிடலாம் என்ற சிங்கள இராணுவவாதிகளின் கணிப்புக்கனவு கலைந்து வருகின்றது. வன்னிப் போரரங்கில புலிகள் வெளிப்படுத்தும் மரபுப் போர்த்திறன், விசயம் தெரிந்த சிங்களத்து உல்லுனர்களுக்கு திகைப்பையும் - அச்சத்தையும் ஊட்டிவருகின்றது.

இந்தப் போர் விரிவாக்கத்திற்கு ஈடுகொடுத்து - யுத்தத்தைத் தொடர்வதற்கேற்ற பொருண்மிய பலத்தை சிங்கள அரசு இழந்து வருகின்றது என்ற உண்மையை சந்திரிகா அம்மையாரும் ஏற்கத் தொடங்கியுள்ளார்.

வன்னியில் தீவிரம் பெறும் மரபுச் சமரைத் தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு நவீன போர் விமானங்களும் - கருவிகளும் மற்றும் சக்திமிக்க ராங்குகளும் - மேலதிக வெடிப்பொருட்களும் அவசியம் தேவையென படைத்தலைமை அரசைக் கோரியுள்ளது. இந்த அவசரத் தேவையை நிறைவேற்றத் தேவையான பணபலம் தனது அரசாங்கத்திடம் →



"காலம் உன் காலடியில் கைகட்டி நிற்கிறது- உன் கோலத்தைப் புதிதாய் குருதியால் எழுது!"


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

## புலிகளின் குரல்

# பொன்னான வாய்ப்பு

இருபத்தாறுவருட வரலாற்றைக் கொண்ட தமிழரின் ஆயுதப்போராட்டம், இப்போது, தீவிரமான கட்டத்தை அடைந்துள்ளது. சிறிலங்காவின் அரசபடைகளுக்கு எதிராக கடுமையானதொரு மரபுப்போரை தொடர்ச்சியாக நடாத்துமளவுக்கு புலிகள் இயக்கத்தின் படையமைப்பும் போர்வலுவும் வளர்ச்சிகண்டுள்ளது. தமிழீழப் போர்ரங்கில் மட்டுமல்ல தீவடங்கிலும் போர் விரிவாக்கம் கண்டுள்ளது.

இருபகுதிப் படைகளினதும் பலப் பரீட்சைக்களமாக வன்னிப்போர்க்களம் அமைந்துள்ளது. கவசப்படையணிகள் மற்றும் மோட்டார் – ஆட்டிலறி படையணிகளின் துணையுடன் வன்னியின் இதயத்தை ஊடறுத்து நகரமுனையும் சிங்களத்துப்படைக்கு பேரழிவுகளை உண்டு பண்ணி - அதன் தரைப்படையை நகரவிடாமல் முடக்கிவைக்கும் அளவுக்கு புலிப்படையின் மரபுப்போர்வலு அதிகரித்துள்ளது.

இதேவேளை, சிங்களத்தின் வான்படையை புலிகளின் விமானஎதிர்ப்பு அணி, ஏறக்குறைய செயலிழக்கச்செய்துவிட்டது. சிங்களக்கடற்படையும், தமிழீழக் கடலில் தூரவிலகியிருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலேயே உள்ளது.

மொத்தத்தில், சிங்களத்தின் முப்படைக்கும் சவால் விட்டுச் சமராடும் அளவுக்கு புலிப்படையின் இராணுவபலம் உயர்நிலையில் உள்ளது.

ஒவ்வொரு போர் அரங்கிலும் வெவ்வேறு வகையான இராணுவ இலக்குகளை அடைய புலிகள் முயல்கின்றனர்.

சிங்களத்துப் படையாட்களைக் கொன்று – அழிப்பதிலும் அவர்களது ஆயுதங்களைப் பறித்தெடுப்பதிலும் கவனம் செலுத்தும் அதேவேளை, அரசின் பொருளாதார இலக்குகளை தாக்கி – அழித்து சிங்களத்துப் போர் இயந்திரத்திற்கு முதுகெலும்பாகவிளங்கும் அரசபொருளாதாரத்தை பலவீனப்படுத்தி விடுவதிலும் புலிகள் இயக்கம் அக்கறை காட்டுகின்றது. இவற்றை வெற்றிகரமாக செயற்படுத்தி வருவதன்மூலம் சிறிலங்காவில் அரசியல்நெருக்கடிகளை தோன்றச் செய்து – போரைநடாத்தும் ஆட்சிபீடத்தை நிலைகுலையச் செய்விக்கும் கைங்கரியத்தையும் புலிகள் இயக்கம் சாதிக்க முயல்கின்றது.

போர்க்கள நிலவரங்களுக்கும் - இராணுவயதார்த்தங்களுக்குமேற்ப விவேகமான முடிவுகளை எடுத்து, சிறப்பான போருபாயங்களைவரைந்து தமிழீழ விடுதலைப்போரை - தலைவர் பிரபாகரன் அவர்கள்- வெற்றியை நோக்கி வழிநடாத்தி வருகின்றார். இதேசமயம் எமது விடுதலைப்போராட்டத்தை ஒடுக்க சிங்கள அரசு, தனது முழுப்பலத்தையும் - வளத்தையும் ஒருங்குதிரட்டி, இறுதி முயற்சி ஒன்றை எடுக்கின்றது.

சிங்களப்படைகுவிப்பின் குவிமையமாக, அண்மைக்காலத்தில், வன்னிப் போர் அரங்கு அமைந்துள்ளது. மாங்குளம் - கிளிநொச்சி என இரண்டு பிரதான சமர்முனைகளை இந்தப்போர் அரங்கம் கொண்டுளளது. ஒவ்வொன்றும், எண்ணாயிரத்தில் இருந்து ஒன்பதுனாயிரம் ஆட்தொகையைக் கொண்ட நான்கு சிங்களத்து டிவிசன்கள் இந்த இரு சமர்முனைகளிலும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

அதாவது, சிங்களத்துத்தரைப்படையின் சுமார் அரைப்பங்கு ஆட்பலம் வன்னிப்போர் அரங்கில் நிலைகொண்டுள்ளது. இந்த ஆட்தொகைக்குள் - சிறப்புக் கொமாண்டோ அணிகள் மற்றும் போர் அனுபவம் வாய்ந்த படையினர் உட்பட சிங்கள இராணுவத்தின் முன்னணிப் படையைச் சேர்ந்த ஏறக்குறைய முக்கால் பங்கினரும் அடங்குகின்றனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

படையாட்களை அழித்து – அவர்களது ஆயுதங்களைப் பறித்தெடுத்தல் என்ற இராணுவத்திட்டத்தை, வன்னிப் போர் முனையில் புலிகள் இயக்கம் வெகுசிறப்பாகவே நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஓயாத அலைகள் தாக்குதலில் இருந்து ஜயசிக்குறுயிக்கு எதிராக நடக்கும் எதிர்ச்சமர்வரை வன்னிப் போர்க்களத்தில் சிங்களப்படை சந்தித்த ஆள் இழப்பு மிக மிக அதிகம். இந்த இரண்டு இராணுவ நிகழ்ச்சிகளுக்கும் இடைப்பட்ட, இந்த 20 மாதத்தில் சுமார் ஐயாயிரம் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். (ஓயாத அலைகளில 1400 – சத்ஜயவில் 600 – ஜயசிக்குறுயில் (இதுவரை) 3000) ஏறக்குறைய எண்ணாயிரம் படையினர் காயமடைந்துள்ளனர். இந்த இழப்புகள் கொடுத்த மனஉளைச்சல்களினால், இந்தக் காலப் பகுதியில் சுமார் பதினையாயிரம் சிப்பாய்கள் படையை விட்டோடியுள்ளனர். எனவே சிங்களப்படையைப் பொறுத்த வகையில் மொத்தம் , இருபத்தெட்டாயிரம் படையினரை வன்னிப்போர்க்களத்தில் இழந்துள்ளது.

இவைகாரணமாக சிங்களப்படை என்றுமில்லாதவாறு பாரிய ஆட்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது. இதனால் வன்னிப்போரரங்கில் அது பாரிய சவால்களை – நெருக்கடிகளைச் சந்திக்கின்றது. நவீன படைக்கலங்களை இறக்குமதி செய்து ஆட்பற்றாக்குறையை ஈடுசெய்ய படைத்தலைமை முயல்கின்றது. ஆயினும், அவை எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொடுக்கும் நிலையில் அரசபொருளாதாரம் இல்லை.

தமிழீழப் போரரங்குகளில் மரணிக்கும் பல்லாயிரம் சிங்கள இளைஞர்களின் சாவுகள் மற்றும் சிங்களவரின் முற்றத்திற்கே போர் விரிவாக்கம் பெற்றதனால் சிங்களமக்களிடம் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வு - பதட்டநிலை காரணமாக போர் அமைச்சர் ரத்வத்த கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகிவருகின்றார். போரையும் சரியாக நடத்தமுடியாமல் சமாதான நடைமுறைக்கும் வரமுடியாமல் சந்திரிகா அரசாங்கமானது திரிசங்கு சொர்க்க நிலைக்குள் சிக்கித்தவிக்கின்றது.

ஆட்பற்றாக்குறைப் பிரச்சனை – ஆயுதத்தட்டுப்பாட்டுப் பிரச்சனை - விநியோகப் பிரச்சனை – புலிகளின் வீரியமான எதிர்த்தாக்குதல்கள் .. என பிரச்சனைச் சகதிக்குள் சிக்கி, சிங்களப்படை அல்லலுறுகின்றது.

சிங்கள அரசின் திரிசங்குசொர்க்க நிலையிலும் – சிங்களப்படையின் இயலாமையிலும்தான் ஈழத்தமிழர் விடிவே தங்கியுள்ளது.

சிங்களப்படைகள் நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும்போது நாம் போரை வேகமாக நகர்த்துவதன்மூலம் வெற்றியை விரைவாகப்பெறமுடியும்.

இப்போது, வன்னிச்சமர் முனைகளில் தடுத்து நிறுத்தப்பட்டு முடக்கிவைக்கப்பட்டுள்ள படையினர்மீது வலிந்ததாக்குதல்களை நடாத்தி படையினரைக்கொன்று – விரட்டி – ஆயுதங்களையும் கைப்பற்றி – நிலங்களை மீட்கும் கைங்கரியத்தை புலிப்படை செய்யவேண்டியுள்ளது.

இந்த போர் உபாயத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு புலிப்படையின் ஆட்பலம் அதிகரிக்கப்படவேண்டும்.

தமிழர்சேனையான புலிப்படைக்குத் தேவையான ஆட்பலத்தை வழங்கவேண்டிய தவிர்க்கமுடியாத கடமை தமிழ்மக்களிடமே உண்டு. வேறெவரும் இந்த ஆட்பலத்தை வழங்கி உதவமாட்டார்கள். இப்போது சர்வதேசசூழலும் தமிழர் போராட்டத்திற்கு சார்பாக திசைதிருப்புகின்றது. போர்க்களநிலையும் தமிழர்சேனைக்கு சாதகமாகவே உள்ளது.

தமிழீழ மக்களைப் பொறுத்தவகையில் இது ஒரு அரிய சந்தர்ப்பம். வெற்றி இலக்கை நோக்கி – போரை வேகமாக நகர்த்துவதற்கேற்ற இந்த பொன்னான வாய்ப்பை எமது மக்கள் கைநழுவ விடக்கூடாது. O

## அரசியல் - பொருண்மிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்று அம்மையார் பகிரங்கமாகவே கைவிரித்துவிட்டார். வருடாந்த பாதுகாப்புச்செலவினமே தலைக்குமேல் சென்றுவிட்ட நிலையில் இவ்விதமான மேலதிக நிதி ஒதுக்கீட்டை அரசு விரும்பினாலும், செய்யக்கூடிய நிலையை இழந்துவருகின்றது.

தமிழீழப்போரரங்கில் மட்டுமல்ல, இப்போது, போர் தீவடங்கிலும் விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. தென் இலங்கை எங்கும் பரவலாகவும் - தொடர்ச்சியாகவும் நடந்துவரும் தாக்குதல்களால் அரசவருமானம் கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. அரசதிறைசேரிக்கு பணமூட்டகளை வழங்கும் கறவைமாடுகளான உல்லாசப் பயணத்துறையும் - வெளிநாட்டு மூலதன வரவுகளும் இத் தொடர்தாக்குதல்களின் விளைவுகளால் மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளன.

சமாதானச்சங்கை ஊதி அதிகாரத்திற்கு வந்த அம்மையாருக்கு சமாதானத் தேவதை என்ற அழகான அடையாளச் சின்னத்தை பெறுவதை விட, விகாரமாதேவி என்ற வெறியூட்டும் பேரினவாதச் சின்னத்தைப் பெறவே விரும்பினார். ஆனால், இந்த இரண்டு அடையாளங்களும் இல்லாமல்போய் அழிவின்சின்னமாகவே அவர் சித்தரிக்கப்படப்போகின்றார்.

சமாதான சூழலை அல்லது போர் வெற்றியை அல்லது பொருண்மிய வளர்ச்சியை எதிர்பார்த்து நின்ற சிங்கள மக்கள், இவை ஒன்றுமே கைகூடாத நிலையில் சந்திரிகா அரசாங்கம் மீது அதிருப்தியையும் கோபத்தையும் கொட்டுகின்றனர். இந்த அரசியல் சூழலை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்திற்கு அரசியல் நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றன.

மொத்தத்தில், போரின் விரிவாக்கத்தாலும் அதன்விளைவுகளாலும் சந்திரிகா அரசாங்கமானது அரசியல் - இராணுவ – பொருண்மிய நெருக்கடிக்குள் சிக்கித் திண்டாடுகின்றது என்பதே இன்றைய யதார்த்த நிலையாகும். ○

# கடற்புலிகளின் நகர்திறன் ஆற்றலை வெளிப்படுத்திய கடற்சண்டை

புலிகளுடனான போரில், சிங்களக்கடற்படை ஆற்றும் மிகமுக்கிய பணியாக, இப்போது, குடாநாட்டிற்கான இராணுவ விநியோகமே உள்ளது. இந்த இராணுவப்பணியையும் தனித்த ஒரு விநியோகக் கப்பல் என்றில்லாமல் பல சண்டைக்கலங்கள் உள்ளிட்ட ஒரு கப்பல் அணியாக செயற்பட்டே கடற்போக்குவரத்தை நடாத்தவேண்டிய நிர்ப்பந்தத்தில் அது உள்ளது.

செலவு அதிகம் என்றாலும் கப்பல் அணிப் போக்குவரத்து உபாயம் பாதுகாப்பிற்கு உத்தரவாதமானது என்று கருதப்பட்டது. இந்தக் கணிப்பில் 22. 02. 98 அன்று மண்வீழுந்துவிட்டது. அன்றைய கடற்சண்டையில் பருத்தித்துறைக்கடலில் ஒரு சரக்குக் கப்பலும் – காங்கேசன்துறைக் கடலில் ஒரு தரையிறங்கு கலமும் மூழ்கடிக்கப்பட்டன. இதன் மூலம் கப்பல் அணிப் போக்குவரத்திற்கு இருந்த பாதுகாப்பு உத்தரவாதம் கேள்விக்குறியாகிவிட்டது.

சிங்கள கடற்படைக்கும் – கடற்புலிகளுக்கும் இடையே நடைபெறுகின்ற கடற்சண்டைகள், இப்போது பெரும்பாலும், ஆழ்கடல் சமர்ப்பரிமாணத்திலேயே நடைபெறுகின்றன. 1994 இல் இந்த புதிய சமர்ப்பரிமாணம் ஆரம்பமாகிவிட்டது. மன்னார்க்கடலில 19 .01. 94 அன்று இடம்பெற்ற சாகரவர்த்தனா மூழ்கடிப்புடன் ஆழ்கடல் சமர்ப்பரிமாணம் உறுதியாக வெளிப்படுத்தப்பட்டது.

அலை எறியும் ஆழ்கடலில் அதற்கென்று விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கடற்கலங்களை வைத்தே சண்டைகளை நடாத்த முடியும். இந்தவகை கடற்கலங்களையே சிங்கள கடற்படை வைத்திருக்கின்றது. இந்த வசதியை கடற்புலிகள் இதுவரை பெறவில்லை. ஆயினும் இருக்கக்கூடிய சாதாரண சண்டைப் படகுகளை பயன்படுத்தி, கடற்புலிகள் திறமையான வகையில் ஆழ்கடல் சண்டைகளையும் அண்மைக்காலமாக நடாத்தி வருகின்றனர். கடற்சண்டையுடன் கூடிய கரும்புலித்தாக்குதல்கள், கடற்புலிகளது முக்கிய ஆயுதமாக விளங்குகின்றன. வெடிமருந்தேற்றப்பட்ட கரும்புலிப்படகுகள் எதிரியின் கடற்கலங்களுக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலைக் கொடுத்து வருகின்றன.

எனினும்22. 02. 98 அன்று குடாநாட்டின் கடற்பரப்பில் பலமணி நேரம் நடைபெற்ற கடற்சண்டை ஆழ்கடற்சமரில் ஒரு வளர்ச்சிக்கட்டத்தைப் புலப்படுத்திவிட்டது. இந்த கடற்சண்டை பிரத்தியேகமான சில இராணுவ அம்சங்களையும் கொண்டுள்ளது.

எதிரியின் ஆக்கிரமிப்பிற்குள் உள்ள தரைப்பகுதியை கரையாகக் கொண்ட கடல்வலயத்தில் இந்த கடற்சண்டை பலமணி நேரம் நடந்துள்ளது என்பது ஒரு இராணுவ அம்சம்.

அத்துடன், கடற்புலிகள் தங்களது கட்டுப்பாட்டிலுள்ள களப்பிரதேசத்திலிருந்து மிகநீண்ட தூரத்திற்கு – எதிரிவலயத்திற்கூடாக ஊடுருவி – துணிகரமான ஒரு கடற்சண்டையை, வெற்றிகரமாக நடாத்திவிட்டு, பாதுகாப்பாக தளம் மீண்டனர் என்பது சண்டையின் மிக முக்கிய இராணுவ அம்சமாகும்.

இதேவேளை, கடற்புலிகளின் நகர்திறன் ஆற்றலை இந்த கடற்சண்டை எதிரிக்குப் புலப்படுத்தியிருக்கும்.

**சமநேரத்தில் தரைப்படையையும் இக்கட்டுக்குள் சிக்கச் செய்வித்து- வான்படையையும் முடக்குவித்து - கடற்படையையும் கட்டிவைக்க முற்படும் வகையில், தலைவர் பிரபாகரனின் போர்ச் செயற்பாடுகள் அமைந்துள்ளன.**


இந்தவகையில், சில ராங்குகள் மற்றும் இராணுவ உபகரணங்களுடன் சென்ற ஒரு கொள்கலன் கப்பலையும் – ஒரு தரையிறங்கு கலத்தையும் என, இரண்டு கடற்கலங்களை மூழ்கடித்தும் – 50 ற்கும் மேற்பட்ட படையினரைக் கொன்றும், கடற்புலிகள் ஒரு ஆழ்கடல் சண்டையை வென்றுள்ளனர். 400 படையினரை ஏற்றிச்சென்ற இன்னொரு தரையிறங்குகலம் தாக்குதலிலிருந்து தப்பியது, படையினருக்கு கிடைத்த அதிஸ்டமாகப் போய்விட்டது.

இரண்டாம் ஈழப்போர்க்காலத்தில் சிறீலங்கா அரசுக்குச் சொந்தமான சுமார் 8000 தொன் எடையுள்ள கடற்கலங்களை புலிகள் கடலடிக்கு அனுப்பிவைத்தனர். இதேவேளை, மூன்றாவது ஈழப்போரில், இதுவரை சுமார் 7000 தொன் எடையுடைய சிங்களத்துக் கடற்கலங்கள் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. மொத்தத்தில் 15.000 தொன்களுக்கும் மேற்பட்ட நிறையுடைய சிங்களத்துக் கடற்கலங்கள் தமிழீழக் கடற்பரப்பில் புதைக்கப்பட்டுள்ளன.

ஒரு விடுதலைப் போரில் இந்த கடற்சமர்ப்பரிமாணம் ஒரு உலக அதிசயமாகவே, இராணுவ வரலாற்றில் பொறிக்கப்படும்.

குடாநாட்டிற்கான இராணுவ விநியோகத்திற்காக ஒரு தரைப்பாதை திறந்துவிட்டால், விநியோகப்பணி என்ற சுமையிலிருந்து, கடற்படை தன்னை விடுவித்து - கடற்சமரில் தீவிர கவனம் செலுத்தும் என்று படைத் தலைமை நம்பியிருந்தது. ஆனால், தரைப்பாதை அமைப்பு படுமோசமான நெருக்கடியைச் சந்தித்து – தடம்புரண்டு நிற்கின்றது. இதேவேளை, பாதுகாப்பானது என்று கருதப்பட்ட– ஆழ்கடல்வழியே நடைபெற்ற கப்பல் அணி விநியோகமும் பாதுகாப்பற்றதாக மாறிவிட்டதால், முன்னெப்போதையும்விட இப்போது, குடாநாட்டிற்கான இராணுவ விநியோகம் பாரியநெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

சமநேரத்தில், தரைப்படையையும் இக்கட்டுக்குள் சிக்கச்செய்வித்து - வான்படையையும் முடக்குவித்து – கடற்படையையும் கட்டிவைக்க முற்படும் வகையில், தலைவர் பிரபாகரனின் போர்ச்செயற்பாடுகள் அமைந்துள்ளன. ○



# சந்திரிகாவின் "ஒப்புதல்" வாக்குமூலம்:

# ஒரு புதுவகைத் தந்திரம்

அரசியலில் ஒருவர் மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கை அல்லது முன்வைக்கும் கருத்து அவருக்குத் தெரிந்தோ அன்றித் தெரியாமலோ அது திட்டவட்டமாக ஒரு தத்துவத்தைச் சார்ந்திருக்கும். ஒரு நடவடிக்கை அல்லது கருத்து அதன் நோக்கத்திலும் விளைவிலும் எடைபோடப்பட வேண்டும். ஆயினும் விளைவே இறுதியானது. இந்தவகையிற் "தமிழ் மக்களுக்குப் பிரச்சனை உண்டு" என்று சந்திரிகா கூறும் கருத்தின் தத்துவ உள்ளடக்கத்தை இக்கட்டுரை பரிசீலிக்கின்றது.

இப்போது எம்முன்னுள்ள பிரச்சனை என்னவெனில் "தமிழ் மக்களுக்குப் பிரச்சனை உண்டு" ஒன்று ஒப்புக்கொள்வதல்ல; தமிழ் மக்களின் பிரச்சனை ஒரு தேசிய இனப்பிரச்சனை என்பதை ஏற்றுக்கொள்வதும், தேசியஇன அடிப்படையில் அவர்களின் அபிலாசைகளை அணுகவேண்டியதும்தான்.

"தமிழ் மக்களுக்குப் பிரச்சனை உண்டு; அவர்களுக்குப் பல குறைகள் உண்டு; மொழிப் பிரச்சனை, கல்விப் பிரச்சனை, வேலைவாய்ப்புப் பிரச்சனை மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரச்சனை; நிர்வாகப் பிரச்சனை; மனித உரிமைப் பிரச்சனை" எனப் பலவாறாகக் கூறித் தமிழ் மக்கள் மீது பச்சாதாபப்படுவதுடன் நின்றுவிடாது மேலும் ஒருபடி மேலே சென்று "கடந்தகால (சிங்கள) ஆட்சியாளர் விட்ட தவறுகள்தான் இதற்கெல்லாம் காரணமென்று "பாவமன்னிப்பும்" கோருகின்றனர்.

உண்மையில் இத்தகைய "ஒப்புதல்" வாக்குமூலமானது உண்மையான பிரச்சனையை மழுங்கடிப்பதற்கும், திசை திருப்புவதற்கும், மேலும் தமிழ் மக்களை ஒடுக்குவதற்குமான ஒரு வழிமுறைதான்.

யானையைப் பார்த்த குருடனைப் போல தமிழ் மக்களின் பிரச்சனைகளை குருட்டுத் தனமாகப் பார்க்கும் "மேதாவிகள்" பலர், ஒடுக்கும் சிங்கள அரசிற்கு உண்மையில் ஒத்தூதுகின்றனர். இந்தக் குருட்டுத்தனமான "மேதாவிகள்" தாம் செய்வது என்ன என்பதை அறியாமல் ஒத்தூதுகிறார்கள். இதேவேளை கண்திறந்த படி தாம் செய்வது என்ன என்பதை அறிந்து ஒத்தூதும் "மேதாவிகளும்" உண்டு. உண்மையில் இந்த இருவகை "மேதாவிகளும்" ஒரே தொழிலையே செய்கிறார்கள்; ஒரே விளைவையே ஏற்படுத்துகிறார்கள். இவர்கள் தமிழ் மக்களின் பிரச்சனையைத் துண்டாடுகிறார்கள்; பிரச்சனையின் கேந்திரத்தைச் சிதைக்கிறார்கள்; இதனால் ஒடுக்குமுறையாளருக்கு முற்றிலும் துணையே போகிறார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சனை ஒரு சட்டப் பிரச்சனையல்ல; அது ஒரு மொழிப் பிரச்சனையல்ல; அது ஒரு நிர்வாகப் பிரச்சனையல்ல; அது அதிகாரப் பகிர்வுப் பிரச்சனையுமல்ல; அது ஒரு தேசிய இனப் பிரச்சனை: குறித்த தேசிய இனத்தின் பெயராலான தேசிய வாழ்வு பற்றிய பிரச்சனை; தேசியஇனக் கௌரவம் பற்றிய பிரச்சனை. இதில் சமாதானம் என்பது சண்டையின்மையல்ல; தேசியஇன கௌரவத்தையும் வாழ்வையும் நிலை நிறுத்தல் என்பதுதான்.

சில வேளைகளில் ஒப்பீடுகள் தவறான பிரமையை ஏற்படுத்தும். அத்தகைய வாய்ப்பிற்குரிய இடங்களில் எதிரி அதனைத் திட்டமிட்டே செய்வதுண்டு. "தமிழ் மக்களின் பிரச்சனை ஒரு பயங்கரவாதப் பிரச்சனையே தவிர வேறில்லை" என்று ஜே. ஆர். ஜெயவர்த்தனா 1980 களில் கூறினார். டி. பி. விஜேதுங்கா இதனையே மேலும் ஒரு படி அழுத்திக் கூறினார். இத்தகைய பின்னணியில் "தமிழ் மக்களுக்குப் பிரச்சனை உண்டு" என்று சந்திரிகா கூறுவது வரண்ட நாக்கில் பாலை வார்ப்பது போற் தோன்றும். இது ஓர் ஒப்பீட்டு மாயை. இத்தகைய மாயைக்கு ஆட்படுவதும், அந்த மாயைக்குள் மயங்குவதும், இதனாற் தன்னிலை இழப்பதும் சாதாரண மக்களின் இயல்பு. ஆதலால் பிரச்சனை உண்டு என்று அதனைத் துண்டங்களாக தனிமைப் படுத்தியோ அன்றி மொட்டைப் படுத்தியோ சொல்வதென்பது உண்மையான பிரச்சனையை எதிர்மறையாக்கிவிடுகின்றது என்பதே பொருள்.

எனவே தமிழ்மக்களுக்குப் பிரச்சனை இருக்கின்றது என்று சொல்வதல்லப் பிரச்சனை; தமிழ் மக்களின் பிரச்சனை ஒரு தேசிய இனப் பிரச்சனை என்று ஏற்றுக்கொள்வதும் அதனடிப்படையிற் தீர்வைக் காண்பதும்தான் பிரச்சனை.

தேசிய இனமென்றால் அதற்கென ஒரு தேசியத் தாயகம் உண்டு; அதற்கெனத் தேசியத் தனித்துவம் உண்டு; அத் தனித்துவத்திற்கேற்ப தனித்துவமான தீர்வுண்டு.

அத்தகைய தனித்துவத்தை மறுத்து, இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்குமான ஒரு பொதுப்பிரச்சனையாகக் குழப்பி-பிரச்சனையின் மையத்தைச் சிதைத்து - மாகாண அதிகாரப் பரவலாக்கற் தீர்வை அரசாங்கம் முன்வைத்துள்ளது. எனவே தேசிய இன அபிலாசை என்ற மையத்தை ஏற்காமல் "தமிழருக்குப் பிரச்சனை உண்டு" என்று பத்தையடி செத்தையடியாய்ச் சொல்வதென்பது உண்மையான பிரச்சனையைக் கைதவற விடுவதற்கான ஒரு நடவடிக்கை என்பதுடன் சந்திரிகா




அரசாங்கம் தன்னை ஒரு நியாயமான அரசாங்கம் எனக்காட்ட எடுக்கும் நடவடிக்கையாயும் உள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சனை தேசியஇன அபிலாசையைக் கொண்டது என்பதை விடுத்து தமிழ் மக்களைப் பற்றி ஒப்பாரி பாடுவதும், முதலைக் கண்ணீர் வடிப்பதும், பச்சாதாபப்படுவதும், பாவம், பரிதாபம் கொள்வதும் தமிழ் மக்களுக்குச் சோறுபோடக்கூடிய விடயங்களல்ல. பிரச்சனை மேற்கூறியவாறு தெளிவாயும், வெட்டொன்று துண்டிரண்டாயும், நேர்க்கணியமாயும், சுற்றிவளைப் பின்றியும் இருக்கும்போது "மேதாவிகளும்", "தாராண்மை" வாதிகளும் தமிழ் மக்களின் பிரச்சனையைப் பற்றி ஆயிரக்கணக்கான பக்கங்களில் பட்டியல் போடுகின்றார்கள்; விரிவுரை செய்கிறார்கள்; விபரணம் செய்கிறார்கள்; வியாக்கியானம் கூறுகிறார்கள்; புத்திமதி சொல்கிறார்கள்; போதிக்கின்றார்கள்; மேலும் நீதிபற்றியும், ஒழுக்கம் பற்றியும் தமிழருக்குப் பலவாறாகப் பிரசங்கிக்கின்றார்கள்.

இப்போது தமிழ் மக்களுக்குத் தேவைப்படுவது இந்தப் பொய்யானதும், போலியானதும், பகட்டானதும், ஏமாற்றுகரமானதுமான சட்ட பண்டித விளக்கங்களும் போதனைகளுமல்ல; இரத்தமும் தசையுமான பிரச்சனைக்கு இரத்தமும் தசையுமான தீர்வுதான்.

தமிழருக்குப் பிரச்சனை உண்டு என்று சொல்வதும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதும், பாவமன்னிப்புக் கோருவதும், சந்திரிகாவை "நியாயமானவர்" என்றும் அனுதாபத்திற்குரியவர் என்றும் காட்ட உதவுமேதவிர தமிழருக்கு எவ்வகையிலும் உதவப்போவதில்லை. இவ்வாறு தோன்றும் "நியாயமானவர்," "அனுதாபத்திற்குரியவர்" என்பன தமிழரை ஒடுக்குவதற்கான மேலதிக வளத்தையும் பலத்தையும் வழங்கும் விடயங்களேதவிர வேறில்லை.

"சுதந்திர" பொன்விழா உரையில் சந்திரிகா "இரத்தக்கண்ணீர்" வடித்தார். வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் "இரத்தக்கண்ணீரைத்தான்" முதன்மைப்படுத்தின. அது சந்திரிகாவிற்கு தற்காலிக வெற்றி. உண்மையில் இந்தக் கிளிசறின் கண்ணீர், பிரச்சனையை மூடிமறைக்கவே உதவியதென்பதுடன் சந்திரிகாவைக் குற்றவாளிக் கூண்டிலிருந்து விலக்கி, அவரை நீதிபதியாகக் காட்டிவிட்டது. கொலைக் குற்றவாளியை நீதிபதியாக்கிய "இரத்தக் கண்ணீரின்" - கிளிசறின்கண்ணீரின் - மகிமைதான் என்னே!

சந்திரிகாவின் 'இரத்தக்கண்ணீரை' தமது பச்சைக்கண்களால் கண்டுகளித்த "மேதாவிகள்" ஓர் உண்மையை பார்க்க மறுக்கின்றனர். அதாவது "இரத்தக் கண்ணீரால்" நிரம்பிவழிந்த அந்தப் பொன்விழா மேடையில் தமிழரின் பிரச்சனை ஒரு தேசியஇனப் பிரச்சனை என்று வாய் தடுமாறிக்கூடச் சொல்லிவிடக் கூடாது என்பதில் அவர் எவ்வளவு உறுதியாயும், அவதானமாயும், நிதானமாயும் இருந்தார் என்பது.

இத்தகைய "ஒப்புதல்" வாக்குமூலங்களும், "பாவமன்னிப்புக்களும்", "இரத்தக் கண்ணீர்களும்" உள்ளடக்கத்தில் உண்மையான பிரச்சனையை மறுதலிப்பவைகளே. இந்த "ஒப்புதல்" வாக்கு மூலங்களினதும், "பாவமன்னிப்புக்களினதும்" "இரத்தக்கண்ணீர்களினதும்" விளைவை விளங்கிக்கொள்ள தமிழ் மக்களுக்கு அகராதிகள் தேவையில்லை; நடைமுறை வாழ்க்கை போதும்.

# அந்தக் குண்டு

சிங்கள அரசின் 'ரிவிரச' யாழ்ப்பாணத்தை இடம்பெயரச்செய்தது. விரமிகு குண்டுத்தாக்குதல் ஒன்று பேரினவாதத்தின் சுதந்திரப்பொன்விழாவை இடம்பெயரச்செய்துவிட்டது.

பண்டைய சிங்கள இராசாக்கள் தங்களது இராசதானிகளை அடிக்கடி இடம்மாற்றிக்கொண்டிருந்தார்கள். அநுராதபுரம் - பொலநறுவ - தம்பாதனிய - மகியங்கணை - கண்டி என்று அவை காலத்திற்கு காலம் இடம்பெயர்ந்துதிரிந்தமைக்கு தமிழர்படையெடுப்பே காரணம் என்று சிங்கள வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

கண்டியில் இருந்து கொழும்புக்கு மாற்றப்பட்ட சுதந்திரப்பொன்விழா கொண்டாட்டத்தையும் அந்த இடப்பெயர்வு வரலாற்றின் தொடர்ச்சியாக, அவர்கள் சொல்லப்போகின்றனர்.

சுதந்திரப்பொன்விழாவின் சிறப்பு அம்சமாக தனது அரசாங்கம் சாதித்த முக்கிய ஒரு சாதனையை முதன்மைப்படுத்திக்காட்ட சந்திரிகா அம்மையார் விரும்பியிருந்தார். தமிழர் நிலத்தை ஆக்கிரமித்துவரும் இராணுவச்செயலை அதற்காகத் தேர்ந்தெடுத்தார். சிங்களமக்களின் இனவாத உணர்வைத் தூண்டி - அரசியல் ஆதாயம் தேடவும் முயன்றார். இந்தப் பேரினவாத விழாவைக் கொண்டாடுவதற்கேற்ற பொருத்தமான இடமாக கண்டி தலதாமாளிகை முன்றலைத் தேர்ந்தெடுத்தார்.

சுதந்திரதின விழாக்கள் தலைநகரங்களில் நடைபெறுவதுதான் பொதுவழமை. சிறீலங்காவின் ஆட்சிமையமாகவும் - பொருண்மிய கேந்திர நகராகவும் - பல்லினமக்கள் வாழும் பெருநகராகவும் தலைநகரான கொழும்பே விளங்குகின்றது.

அப்படியிருக்க பொன்விழாவிற்காக கண்டி தேர்ந்தெடுக்கப்பட்டது ஏன்?

கண்டி: கடைசியாகப் பறிபோன சிங்கள இராசதானி.

அதேவேளை, சிங்களவர் கைகளில் தீவின் ஆட்சி அதிகாரத்தை பிரித்தானியா ஒப்படைத்தபோது அதைப் பெறுமிடமாக கண்டி தலதாமாளிகை முன்றலையே சிங்கள ஆளும் வர்க்கம் தேர்ந்தெடுத்திருந்தது. அத்துடன், தமிழருக்கு ஓரளவிற்கேனும் உரிமைவழங்க முயன்ற பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியவைக்க ஜே. ஆர். நடாத்திய இனவாத அரசியல் யாத்திரையும் தலதாமாளிகை நோக்கியே நடாத்தப்பட்டது.

1995ஆம் ஆண்டு சிங்களப்படைகளால் யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட்டபோது அதன் வெற்றி விழா கண்டியிலும் கொண்டாடப்பட்டது.

இப்போது, குடாநாட்டிற்குத் தரைப்பாதை அமைத்துவிட்டு - அந்த இராணுவவெற்றிவிழாவை ஒரு பொன்விழா பரிசாக இனவாதபூதத்திற்கு வழங்க கண்டியை சந்திரிகா அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளது.

இவ்விதமாக, சிங்கள - பௌத்தபேரினவாதத்தின் உயிர் நிலையாகவும் அதன் அரசியல் - சித்தாந்த தளமாகவும் தலதாமாளிகையை மையமாகக்கொண்ட கண்டி செயற்பட்டுவருகின்றது.


எனவேதான் பேரினவாத அரசாங்கத்தால் - பேரினவாத விழாவிற்காக - பேரினவாதத்தின் தலைநகரான கண்டி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.

இனவாதத்திமிரை வெளிப்படுத்தியபடியும் - இராணுவச்சவால்களைத் தொடுத்தபடியும், சிங்கள அரசு பொன்விழாக்கொண்டாட்ட ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தபோது தலதாமாளிகை முன்றலில் அந்தப் பேரிடி இறங்கியது.

> பல்லாயிரம் படையினரையும் - அவர்களது பாதுகாப்பு வல்லமைகளையும் துளைத்துக் கொண்டு - அவர்கள் எங்கிருந்தோ உதித்து - ராஜவீதியில் மிதந்தார்கள். பேரினவாதத்தின் முற்றத்தில் நகர்ந்து - அதன் நெஞ்சுமீது ஏறிமிதித்து மூக்கின்மேலால் நகர்ந்து - இரண்டு கண்களுக்கும் நடுவால் நழுவிப்போய் அந்த இராணுவ அற்புதத்தைப் படைத்தார்கள்.

பல்லாயிரம் படையினரையும் - அவர்களது பாதுகாப்பு வல்லமைகளையும் துளைத்துக்கொண்டு - அவர்கள் எங்கிருந்தோ உதித்து - ராஜவீதியில் மிதந்தார்கள். பேரினவாதத்தின் முற்றத்தில் நகர்ந்து அதன் நெஞ்சுமீது ஏறிமிதித்து - மூக்கின்மேலால் நகர்ந்து - இரண்டு கண்களுக்கும் நடுவால் நழுவிப்போய் அந்த இராணுவ அற்புதத்தைப் படைத்தார்கள்.

தமிழினத்திற்கு எதிராகப் போரைதொடக்கி - தமிழர்களை இன அழிப்புச்செய்துகொண்டிருந்த பேரினவாத பூதத்திற்கு - அதன் உயிர்நிலையிலேயே பலத்த பதிலடி விழுந்து விட்டது. இனவாதப்பொன்விழாவையும் அகதியாக்கி - தனிமைக்குள் முடக்கவிட்டது. சந்திரிகா - ரத்வத்த குழுவினரின இராணுவத்திமிரையும் அடக்கிவிட்டது. ○



# உடைந்துபோன ஒப்பந்தமும் உறுதிதளராத புலிகளும்

பத்து ஆண்டுகளுக்கு முன்னரே இறந்துபோன இந்திய - இலங்கை ஒப்பந்தம் மீது இப்பொழுது புதிதாக ஒரு பிரேத பரிசோதனை நடைபெற்றிருக்கிறது. இந்தப் பரிசோதனையை நடத்தியிருப்பவர் முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்சிட். 'கொழும்புப் பணி' (Assignment Colombo) என்ற தலைப்பில் அவர் எழுதி வெளியிட்டிருக்கும் இந் நூல், ஒப்பந்தம் பிறந்த காலத்திலிருந்து இறந்த காலம் வரையிலான ஒரு நீண்ட மரண விசாரணையை நடத்துகிறது.

காலம் கடந்த விசாரணையாகவே இந்த நூல் பலராலும் விமர்சிக்கப்படுகிறது. ஒப்பந்தம் என்ற ராஜதந்திர நாடகம் அரங்கேற்றப்பட்டு ஒரு தசாப்தம் கழிந்து விட்டது. இந்த நாடகத்தின் பிரதான இயக்குனர்களும், கதாநாயகர்களும் இப்போது உயிருடனில்லை. அப்போது, ஒப்பந்தம் கடும் சர்ச்சையைக் கிளப்பி, வடகிழக்கில் கொடும் யுத்தத்தையும், தெற்கில் பெரும் வன்முறைப் புயலையும் தோற்றுவித்த போது வாய்மூடி மௌனம் சாதித்த டிக்சிட் அவர்கள், நீண்டகால இடைவெளியின் பின்னர் இந்திய வரலாற்றின் கறைபடிந்த பக்கங்களை திருப்பிப்பார்க்க முனைவது வேடிக்கையான விடயமே. பற்றற்ற நிலையில் நின்று, நிதானமாகச் சிந்தித்து, புறநிலைப் பார்வையுடன் தெளிவாக எழுத காலம் தேவைப்பட்டதாக அவர் காரணம் சொல்கிறார். இந்தக் காரணத்தை யாரும் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்தியத் தலையீட்டால் எழுந்த அரசியற் சூறாவளி அடங்கிப் போகும்வரையும் அவர் காத்திருந்தார் என்பதுதான் உண்மை. இந்த அரசியற் சூறாவளியில் ஒப்பந்தப் பிதாமகர்கள் பலர் அள்ளுப்பட்டுச் சென்றதும் அவருக்கு வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

நீண்ட காலம் தவமிருந்து, மாண்டுபோன நிகழ்வுகளை இரை மீட்டுப் பார்த்து, டிக்சிட் எழுதியிருக்கும் இந்நூல் வரலாற்று உண்மையின் சுயதரிசனமாக அமையவில்லை. உண்மைக்கு முகம்கொடுக்க அவர் தயாராக இல்லை. இந்திய ராஜதந்திரத்தின் இமாலயத் தோல்விகளுக்கு நியாயம் கற்பிக்கும் வாத விளக்கமாகவே அவரது நூல் அமையப்பெறுகிறது. இந்தியத் தலையீடானது தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாக எழுந்ததென்பதும், இந்தியாவினதும் இலங்கையினதும் நீண்டகால நலனைப்பேணுவதே அதன் நோக்கமாக இருந்ததென்பதும் அவரதுவாதம். இந்த 'உன்னதமான' ராஜரீக முயற்சியை சுயநலம்கொண்ட தீயசக்திகள் குழப்பியடித்ததாக அவர் ஆதங்கப்படுகிறார். இந்தியத் தலையீடுபற்றிய வரலாற்றுப் பதிவேட்டில் தவறுகளும் தப்பபிப்பிராயங்களும் பொதிந்து கிடப்பதாகக் குறிப்பிடும் அவர், சீரற்றுக் கிடக்கும் இந்த வரலாற்றுப்பதிவினை சீர்செய்து விடுவதே தனது எழுத்தின் நோக்கம் என்கிறார்.

டிக்சிட்டின் நோக்கம் இங்கு தெளிவாகப் புலனாகிறது. விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற வாதமாக, தோல்விகண்ட இந்திய ராஜதந்திர வரலாற்றுக்கு 'வெற்றிமாலை' அணிந்துவிட அவர் முயற்சிக்கிறார். இந்த முயற்சியால் சரிந்துபோன வரலாற்றுப் போக்கினை நிமிர்த்திவிடலாமென அவர் எண்ணுகிறார் போலும். இந்தியத்தலையீடானது 1983 லிருந்து 90 வரையிலான வரலாற்றுக் காலத்தையும் அந்தக்காலத்தில் கட்டவிழ்ந்த பூகம்ப நிகழ்வுகளையும் திருப்பங்களையும் கொண்டது. அரசியல், ராஜதந்திர, இராணுவப் பரிமாணங்களைக்கொண்ட இந் நிகழ்வுகளும் அதனால் எழுந்த வரலாற்றுத் திருப்பங்களையும் மாற்றங்களையும் ஒரு தனிநபரின் சுயவிமர்சனக் குறிப்பேட்டால் மாற்றிவிடமுடியாது. இக் காலவிரிப்பின் ஒரு காலகட்டத்தில் ராஜதந்திர காய் நகர்த்தும் சூத்திரதாரியாக டிக்சிட் செயற்பட்டார் என்பது உண்மை. ஒப்பந்தத்தின் சிருஷ்டிகர்த்தாக்களில் ஒருவராகவும் அவர் பணிபுரிந்திருக்கிறார். தனது கொழும்பு ராஜதந்திரப் பணியின் உச்சப் பெறுபேறாக பெற்றெடுக்கப்பட்ட ஒப்பந்தக் குழந்தை குறைமாதத்தில் இறந்துபோனது அவருக்கு ஆழ்ந்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. இந்த மரணத்திற்கு காரண காரியத்தை ஆராயும் அவர், அதனை இந்திய ராஜதந்திரத்தின் தோல்வியாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். இது அவரது நேர்மையின்மையை புலப்படுத்திக் காட்டுகிறது. அவரது ஆய்வுநூலின் தோல்வியும் அதுதான்.

டிக்சிட்டின் நூல் கனமானதாக இல்லை. அரசியல் பிரச்சனைகள் ஆழமானதாக அலசப்படவில்லை. ஒரு பழுத்த ராஜதந்திரிக்கு இருக்க வேண்டிய விவேகமும் சாணக்கியமும் அவரது எழுத்தில் காணக்கூடியதாக இல்லை. சுயசரிதச் சித்திரமாக தனது கொழும்புப் பணியை சித்தரித்து, தனது உறவுகளையும், உரையாடல்களையும் விபரித்து, தான் உறவாடியவர்களின் தனிமனிதப் பண்புகளை விளக்கி, பத்திரிகைப் பாணியில், கால வரிசையில் நிகழ்வுகளை நகர்த்திச் செல்கிறார். இந்த விபரணச் சித்தரிப்பில் அடிப்படைப் பிரச்சனைகள் ஆழமாகப் பார்க்கப்படவில்லை. மாறாக, ஆட்களும், அவர்களது ஆளுமைகளும், அவர்களது விருப்பு வெறுப்புகளுமே மேலோங்கி நிற்கின்றன. அதிகாரத்திலுள்ள ஆட்களை பகடைக் காய்களாக நகர்த்தும் சதுரங்க ஆட்டமாக டிக்சிட்டின் ராஜதந்திரம் நிகழ்கிறது. பிரச்சனைகளின் புறநிலைகளைப் பார்க்காது, பிரமுகர்களை கைக்குள் போட்டு காரியத்தை சாதிக்க முயன்றதால் தான் இந்திய ராஜதந்திரம் தோல்வி கண்டது எனலாம்.

தமிழரின் இனப்பிரச்சனையின் ஆழம், அகலம் பற்றியும், அப் பிரச்சனையானது தன்னாட்சி கோரும் தேசியப் போராட்டமாக வடிவம் எடுத்த வரலாற்றுப் புறநிலை பற்றியும் டிக்சிட் மட்டுமல்ல அன்றைய இந்தியத் தலைவர்களும் செம்மையாகப் புரிந்துகொள்ளவில்லை. அதேசமயம் சிங்கள தேசத்தில் விஸ்வரூபப் பரிமாணம் பெற்றிருந்த பேரினவாதத்தின் தமிழர் விரோதப் போக்குப் பற்றியும் அவர்கள் சரியான எடை போட்டதாகத் தெரியவில்லை. ஒட்டுமொத்தத்தில், தமிழ் சிங்கள தேசங்கள் மத்தியில் கூர்மைபெற்றிருந்த முரண்பாட்டை தெளிவாகப் புரியாமல், பிளவுபட்டு நின்ற இரு தேசிய சக்திகளை, தனது புவியியல் நலனுக்காக ஒன்றிணைய நிர்ப்பந்தித்ததன் காரணமாகவே இந்தியத் தலையீடு தோல்வியில் முடிந்தது. இந்த வரலாற்று உண்மையை டிக்சிட் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். டிக்சிட்டின் பார்வையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் புனிதமான நோக்கைக் கொண்டது. தமிழரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அரசியல் தீர்வு அதிலுண்டு என்கிறார். சிங்களவரின் அபிலாசைகளை நிறைவு

## அன்ரன் பாலசிங்கம்

செய்யும் வகையில் ஒற்றையாட்சியும் நில ஒருமைப்பாடும் அதில் வலியுறுத்தப்பட்டிருப்பதாக கூறுகிறார். இப்படியாக, இவ்வொப்பந்தம் தமிழரதும் சிங்களவரதும் நலனைப் பேணும் ஒரு தலைசிறந்த உடன்பாடாக அமைந்திருக்கிறது என்பது டிக்சிட்டின் வாதம். இது மேலோட்டமான சிறுபிள்ளைத்தனமான ஒரு கண்ணோட்டம். உருப்படியான அரசியல் அதிகாரம் எதுவுமற்ற மாகாணத்திட்டமானது தனியரசு கோரிப் போராடிவரும் தமிழினத்தின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்திவிடும் என டிக்சிட் நினைப்பது அபத்தமானது. அதேசமயம், பிரதேச ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் ஒற்றையாட்சியின் கீழும் தமிழருக்கு உரிமை வழங்க சிங்களத் தலைமை தயாராக இல்லை என்பதையும் அவர் உணரவில்லை. தமிழரின் தேசியப் போராட்டத்தின் அடிப்படைகள் பற்றியோ, தமிழர்கள் மீது சிங்கள - பௌத்த பேரினவாதம் கொண்டிருந்த விபரீதமான பகையுணர்வு பற்றியோ அவர் ஆழமாகப் புரிந்திருக்கவில்லை என்பதுதான் உண்மை. இந்த அறியாமை இருள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் மட்டுமன்றி, டில்லி அரச நிர்வாகத்திலும் பரந்துகிடந்தது.

இந்தியா இலங்கையில் தலையிட்டமைக்கு இரண்டு காரணங்களைக் கூறுகிறார் டிக்சிட்.

முதலாவதாக, தீவிரமடைந்து வந்த தமிழரின் இனப்பிரச்சனை. தமிழர்கள் மிக மோசமான அரச ஒடுக்குமுறைக்கு ஆளாகிவந்தனர். இந்த ஒடுக்குமுறை இன அழிப்புப் பரிமாணத்தை எட்டியது. இதன் எதிர்வினையாக தமிழகத்தில் கொந்தளிப்பான அரசியல் நிலைமை தோன்றியது. ஈழத் தமிழர்களுக்கு இந்தியா உதவ வேண்டுமென்ற கோரிக்கையும் வலுத்தது. இந்தியா தலையிடாதுபோனால், தமிழகத்தில் தமிழ்த் தேசியவாதம் மீண்டும் உயிர்பெற்றெழுந்து பிரிவினைவாதத்திற்கு வழிகோலியிருக்கும். இது பாரத நாட்டின் ஐக்கியத்திற்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக முடியும், என்கிறார்.

இரண்டாவதாக, தமிழரின் உரிமைப் போராட்டத்தை நசுக்கும் நோக்கில் ஜெயவர்த்தனா அரசு இந்தியாவுக்கு விரோதமான அந்நிய சக்திகளின் ஊடுருவல்களுக்கு இடமளித்து வந்தது. சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளிலிருந்து உதவியைப் பெற்றுவந்தது. 'அமெரிக்காவின் குரல்' என்ற அமெரிக்க ஒலிபரப்பு நிறுவனம் சிலாபம் கடலோரமாக தளம் அமைக்க இடமளித்திருந்தது. திருகோணமலை எண்ணெய் குதங்களை திருத்தியமைக்கும் வேலைத் திட்டத்தை அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு கையளித்திருந்தது. இப்படியாக, அமெரிக்க வல்லரசு இலங்கையில் காலூன்றுவதற்கு ஜெயவர்த்தனா அரசு வழிவகுத்துக்கொடுத்தது. சோவியத் யூனியன், ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து நின்ற காலமது. இச்சூழலில், ரஷ்ய ஆக்கிரமிப்பை முறியடிக்க அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகள் கூட்டாகச் செயற்பட்டன. சோவியத் யூனியனின் நட்பு நாடு என்ற ரீதியில் இந்தியாமீது நெருக்குதல் கொடுக்கவும் இந்நாடுகள் முயன்றன. இந்த அந்நிய சக்திகள் இலங்கையில் ஊடுருவி கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த தென்பிராந்தியத்தில் ஒரு 'அழுத்த முனையை' உருவாக்க முயன்றன. இது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது, என்கிறார்.

டிக்சிட் கூறும் இவ்விரு காரணங்களையும் பரிசீலனைசெய்து பார்க்கும்போது, இந்தியா தனது சொந்த நலனைப் பேணவே இலங்கையில் தலையிட்டது என்பது தெட்டத்தெளிவாகிறது. இன அழிவை எதிர்கொண்டு நின்ற தமிழர்களுக்கு உதவிசெய்து இனப்பிரச்சனையை தீர்த்துவைக்கும் நோக்குடன் இத்தலையீடு நிகழவில்லை. இலங்கையில் காலடி எடுத்துவைக்க, தமிழர் பிரச்சனையை ஒரு இறங்கு தளமாகவே இந்தியா பயன்படுத்தியது எனலாம். இன அழிவை தடுக்கும் ஒரு மனிதாபிமான நல்லெண்ண முயற்சியில் இறங்குவதாக சர்வதேச உலகிற்கு காட்டிக்கொண்டு, தனது புவிசார் கேந்திர நலனை நிலைநிறுத்திக்கொள்ளவே இந்தியா இலங்கையில் குறுக்கிட்டது. இந்திய இலங்கை ஒப்பந்த இணைப்பிலுள்ள விதிகள் இதனைத் தெளிவாகப் புலப்படுத்திக்காட்டுகின்றன. அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகள் இந்திய நலனுக்கு விரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசு தளம் அமைத்துக் கொடுக்கக்கூடாதென இவ்விதிகள் கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் 'சமத்துவத்தின் அடிப்படையில்' இரு நாடுகளினதும் பரஸ்பர நலன்களைப் பேணுகிறது என்கிறார் டிக்சிட். இந்தப் பரஸ்பர நலன்கள் யாவை? இந்தியாவுக்கு விரோதமான அந்நிய சக்திகளின் ஊடுருவல்களை இலங்கை தடுத்து நிறுத்த வேண்டும். இது இந்திய நலனைப் பேணும். இதற்குப் பிரதிபலனாக தமிழரின் விடுதலைப் போருக்கு முடிவு கட்டி, தமிழரின் பிரிவினைப் போக்கை இந்தியா தடுத்து நிறுத்தும். விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறித்து, மாகாணத் தீர்வை தமிழர்கள் மீது திணிப்பதன் மூலம் இது சாத்தியமாகும். இதனால் இலங்கையின் ஒற்றையாட்சி பலப்படும். அத்தோடு இலங்கையின் ஐக்கியத்திற்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் இந்தியா உத்தரவாதமளிக்கும். இவ்விதம் இலங்கையின் தேசிய நலனை இந்தியா பேணிப் பாதுகாக்கும். எனவே, இந்திய இலங்கை ஒப்பந்தமானது, சாரம்சத்தில், இரு தரப்பினரதும் தேசிய நலன்களைப் பேணுவதாக அமைகிறது என விளக்குகிறார் டிக்சிட். இந்த விளக்கத்திலிருந்து இந்தியாவின் ராஜதந்திர தந்திரோபாயம் தெளிவாகிறது. தமிழரின் தேசிய நலனை விலையாகக் கொடுத்து, தனது நலனையும், சிங்களத்தின் தேசிய நலனையும் பேண முனைந்தது இந்தியா. தமிழரின் தன்னாட்சி உரிமையை இவ்வொப்பந்தம் சமாதிகட்ட முனைந்தது என்பதால்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒப்பந்தத்தை எதிர்த்தது. இவ்வொப்பந்தமானது இலங்கைத்தீவின் சுயாதீனத்தையும் இறைமையையும் கட்டுப்படுத்துகிறது என்பது ஜெயவர்த்தனாவுக்கு தெரியாததல்ல. ஆயினும் அவர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் துணிந்தார். இலங்கையின் சுதந்திரம் பாதிக்கப்பட்டாலும் தமிழர்கள் சுதந்திரமாக வாழக்கூடாது என்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். இந்தியாவைப் பயன்படுத்தி தமிழரின் தன்னாட்சிப் போருக்கு முதலில் முடிவு கட்ட வேண்டும். பின்னர் ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்து இந்திய ஆதிக்கப்பிடியிலிருந்து விடுபட வேண்டும் என்பது அவரது திட்டம். ஜெயவர்த்தனாவின் தந்திரம் இந்திய ராஜதந்திரத்தை மிஞ்சி நின்றது என்பதை டிக்சிட் புரிந்துகொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒப்பந்தத்தை எதிர்த்தார் என்றும், பிரேமதாசா, லலித் போன்றோர் ஒப்பந்தத்தை முறியடிக்க சதிசெய்தனர் என்றும், ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை அமுல்படுத்த மறுத்தார் என்றும் ஒப்பந்தத்தின் தோல்விக்கு காரணம் கற்பிக்கிறார் டிக்சிட். இந்த வாதம் தவறானது. ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகளே ஒப்பந்தத்தின் தோல்விக்கு காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் டிக்சிட், எல்லோருக்கும் நன்மை பயக்கும் ஒரு நல்ல காரியத்தை எல்லோரும் சேர்ந்து கெடுத்துவிட்டார்களே எனப் புலம்புவது கேலிக்கூத்தானது. இந்த ஒப்பந்தமானது இந்தியாவின் மேலாதிக்கப் பசியை திருப்திப்படுத்தியதே தவிர தமிழரையோ சிங்களவரையோ திருப்திப்படுத்தவில்லை என்பதுதான் உண்மை. பிணக்குப்பட்ட இரு பூனைகளுக்கு அப்பத்தை பிரித்துக்கொடுப்பதாகக் கூறி, தான் பசியாறிய குரங்கின் கதைதான் இங்கு நினைவுக்கு வருகிறது.

இருநாடுகளது வெளியுறவையும் தமிழ் சிங்கள தேசிய இனங்களின் நீண்டகாலச் சிக்கலையும் தீர்மானிக்க முயன்ற ஒரு முக்கிய ஒப்பந்தம் வெகுசனக்கருத்தாடலுக்கு விடப்படாது, திரை மறைவில், அவசரமாக இரகசியமாகச் செய்து கொள்ளப்பட்டது. இந்த உண்மையை மறுதலிக்கிறார் டிக்சிட். ஒப்பந்தம் பற்றி விடுதலைப் புலிகள் உட்பட எல்லாத் தரப்பினருடனும் ஆழமாக விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டதாகக் கூறும் அவர், விசமத்தனமான ஒரு பொய்யையும் புனைந்துவிடுகிறார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், ஆரம்பத்தில் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதாக வாக்களித்துவிட்டு பின்னர் ஒப்பந்தத்தை எதிர்த்து நம்பிக்கைக் கேடு செய்தார் என்பது டிக்சிட்டின் குற்றச்சாட்டு. எந்தக் காலத்திலும் எந்தக் கட்டத்திலும் தலைவர் பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஒப்பந்தத்தை அவர் எதிர்த்துநின்றார் என்பதுதான் உண்மை. இது டிக்சிட்டுக்கு மட்டுமன்றி உலகத்திற்கே நன்கு தெரியும். ஒப்பந்தத்தை எதிர்த்து நின்றது மட்டுமல்லாமல் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வந்த இந்திய இராணுவத்திற்கு எதிராகவும் ஆயுதமேந்திப் போராடினார் என்பதும் உலகறிந்த உண்மை. இந்திய இலங்கை ஒப்பந்தமானது தமிழரின் தன்னாட்சி உரிமைக்கு ஆப்பு வைக்கும் ஒரு அடிமை சாசனம் என்பது தலைவர் பிரபாகரனின் நிலைப்பாடு.

1987 ஜூலையில் இந்திய உதவித் தூதர் பூரி யாழ்ப்பாணம் வருகைதந்து, ஒப்பந்தம்பற்றி புலிகளோடு கலந்துரையாடி, தலைவர் பிரபாகரனின் ஒப்புதலைப்பெற்று அவரை புதுடில்லிக்கு அழைத்துவந்தாரென இன்னொரு கட்டுக்கதையையும் அவிழ்த்துவிடுகிறார் டிக்சிட். உதவித் தூதர் பூரி யாழ்ப்பாணம் வருகைதந்தது உண்மை. ஆனால் அவர் ஒப்பந்தம்பற்றி புலிகளோடு கலந்துரையாடவில்லை. ஏதோ முக்கிய விடயமாக பாரதப் பிரதமர் சந்திக்க விருப்பதாக பொய்சொல்லி, ஏமாற்றி, தலைவர் பிரபாகரனை புதுடில்லிக்கு அழைத்துச் செல்லவே அவர் வந்தார்.

புதுடில்லியில், அசோகாவிடுதியில், தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட நிலையில்தான் புலிகளுக்கு முதன்முதலாக ஒப்பந்தம் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த அறிமுகத்தைச் செய்தவரும் டிக்சிட்தான். ஒப்பந்தத்தில் நிறைய குறைபாடுகள் இருப்பதாக சுட்டிக்காட்டி, ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தார் தலைவர் பிரபாகரன். டிக்சிட் விளக்கங்கள் கொடுத்தார், அழுத்தங்கள் கொடுத்தார், மிரட்டியும் பார்த்தார். முடியவில்லை. தலைவர் பிரபாகரன் தனது நிலைப்பாட்டில் உறுதி தளராது நின்றார். பின்னர் இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தியுடனான சந்திப்பின்போதும் தலைவர் பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து தனது நிலைப்பாட்டில் இறுக்கமாக நின்றார். இறுதிவரை ஒப்பந்தத்தை அவர் ஏற்கவில்லை. இதுதான் உண்மை.


இந்திய இலங்கை ஒப்பந்தம் சம்பந்தமாக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி 4.8.1987 இல் சுதுமலையில் தலைவர் பிரபாகரன் நிகழ்த்திய உரையிலிருந்து சில பந்திகள்:

"திடீரென மிகவும் அவசரமாக, எமது மக்களையோ, எமது மக்களின் பிரதிநிதிகளாகிய எம்மையோ கலந்தாலோசிக்காமல், இந்தியாவும் இலங்கையும் செய்துகொண்ட ஒப்பந்தம் இப்பொழுது அவசர அவசரமாக அமுலாக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் டெல்லி செல்லும் வரை இந்த ஒப்பந்தம் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. பாரதப் பிரதமர் என்னை சந்திக்க விரும்புவதாகச் சொல்லி என்னை டெல்லிக்கு அவசரமாக அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றதும் இந்த ஒப்பந்தம் எமக்கு காண்பிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் இருந்தன. பல கேள்விக்குறிகள் இருந்தன. இந்த ஒப்பந்தத்தால் எமது மக்களின் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுமா என்பது பற்றி எமக்குச் சந்தேகம் எழுந்தது. ஆகவே இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இந்திய அரசுக்குத் தெட்டத் தெளிவாக விளக்கினோம் ..........."

" இந்த ஒப்பந்தம் நேரடியாக எமது இயக்கத்தைப் பாதிக்கிறது; எமது அரசியல் இலட்சியத்தைப் பாதிக்கிறது; எமது போராட்ட வடிவத்தைப் பாதிக்கிறது; எமது ஆயுதப் போராட்டத்திற்கு ஆப்பு வைப்பதாகவும் அமைகிறது. பதினைந்து வருடங்களாக, இரத்தம் சிந்தி, தியாகங்கள் புரிந்து, சாதனைகள் ஈட்டி, எத்தனையோ உயிர்ப்பலி கொடுத்து கட்டி எழுப்பப்பட்ட ஒரு போராட்ட வடிவம் ஒரு சில தினங்களில் கலைக்கப்படுவதென்றால் அதை எம்மால் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது ... .. "

"தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதை நான் இங்கு திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன் ....."

பத்து ஆண்டுகளுக்கு முன்னர், ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு சில நாட்களின் பின்னர், தலைவர் பிரபாகரன் வெளியிட்ட பகிரங்கப் பிரகடனம் இது. ஒப்பந்தம் பற்றிய அவரது நிலைப்பாடு என்ன என்பது இக் கூற்றுக்களிலிருந்து தெளிவாகிறது அல்லவா?




**டிக்சிட்டின் நூலின் முன் அட்டையை அலங்கரிக்கும் அரசியற் கேலிச் சித்திரம். புலியும் சிங்கமும் மோதுவதாக குறியீடு செய்யப்படும் தமிழ் சிங்கள தேசங்களின் இனப் போரில் தலையிட முனைந்த இந்தியாவின் அவல நிலையை அர்த்தத்துடன் சித்தரிக்கிறது இக் கருத்தோவியம்.**

விடுதலைப் புலிகள் சம்பந்தமாக பல பொய்களும் புரட்டுகளும் டிக்சிட்டின் நூலில் மலிந்து கிடக்கின்றன. சிறிலங்கா அரசின் 'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையால் தோல்வியின் விளிம்பிற்கு தள்ளப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு அரசியல் இணக்கப்பாட்டிற்கு முன்வந்தது என்று ஒரு புரளியை கட்டவிழ்த்து விடுகிறார் டிக்சிட். இந்தத் தகவலை புலிகளின் சிங்கப்பூர் பிரதிநிதி, 'இந்து' பத்திரிகை ஆசிரியர் ராமிற்கு தெரிவித்தாராம். ராம் அதனை இந்திய அரசிற்கு அறிவித்தாராம். இந்த தகவலை நம்பியே இந்திய அரசு சிறிலங்கா அரசுடன் பேசியதாம் இந்தப் பேச்சின் பயனாகவே ஒப்பந்த யோசனைகள் பிறந்ததாம். இப்படியானதொரு புனை கதையை சோடிக்கிறார் டிக்சிட். யார் இந்தப் பூடகமான சிங்கப்பூர்ப் புலி என்பதை அவர் சொல்லவில்லை. விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திலிருந்து அதிகாரபூர்வமாக வெளிவராமல், வெளிநாடு ஒன்றில் பெயர் தெரியாத மனிதர் ஒருவர் தெரிவித்ததாகக் கூறும் தகவலை ஆதாரமாகக் கொண்டு, இந்திய அரசு சமரசப் பேச்சுக்களில் இறங்கியதென்றால் இது ஒரு கேலிக்கூத்தான விடயமே. இந்நிகழ்வு இந்திய ராஜதந்திரத்தின் திறனாற்றலையே கேள்விக்குறியாக்குகின்றது. அன்று யாழ் மீதான இராணுவ நடவடிக்கையால் புலிகள் இயக்கம் அப்படி ஆட்டம்கண்டுவிடவில்லை. வடமராட்சியில் மில்லரின் தற்கொலைத் தாக்குதலால் சிங்கள இராணுவம் தான் கதிகலங்கி நின்றது. இந்தத் தாக்குதலின் அதிர்ச்சியால் சிங்கள அரசுதான் பேச்சுக்குப் பணிந்து வந்தது. புலிகள் பயந்துபோய்ப் பணிந்து வந்தார்கள் என்பது டிக்சிட்டின் கற்பனையில் உதித்த கட்டுக்கதை.

விடுதலைப் புலிகளின் இலட்சியம் தமிழீழமல்ல, 'பெருந்ஈழம்' என்கிறார் டிக்சிட். இலங்கைத் தீவின் வடகிழக்கும், தமிழ்நாடும், தென்கிழக்கு ஆசியாவின் தமிழ் பேசும் பிரதேசங்களும், மொரிஸஸ் தீவுமாக, அகன்று பரந்த தமிழ் இராச்சியம் ஒன்றைக் கட்டியெழுப்புவதே விடுதலைப் புலிகளின் இலட்சியக் கனவு என்கிறார். பெரும் ஈழமாக, அகன்ற தமிழ் சாம்ராஜ்யத்தைக் கட்டும் இந்தக் கருத்துவடிவம், புலிகளின் பரப்புரை ஏடுகளில் பூடகமாகச் சொல்லப்படுவதாகவும் குறிப்பிடுகிறார். இது டிக்சிட்டின் சொந்தக்கற்பனையா, அன்றி இந்திய மத்திய அரசின் ஆதாரமற்ற ஒரு பீதிக்கு இவர் எழுத்து வடிவம் கொடுத்தாரா என்பது தெரியவில்லை. இப்படியான கட்டுக்கதைகளை இவர் அவிழ்த்து விடவேண்டிய அவசியம் என்ன என்பது புரியவில்லை. இந்திய ராஜதந்திரத்தின் தோல்வியை நியாயப்படுத்த இப்படியுமா பொய் சொல்லவேண்டும்.

முன்பெல்லாம் தலைவர் பிரபாகரன் பற்றி மிகவும் இழுக்கான முறையில் எழுதியும் பேசியும் வந்த டிக்சிட்டிற்கு, பத்தாண்டு கால கடலை ஞானத்தின் பின்பு ஒரு புதிய வெளிச்சம் ஏற்பட்டிருக்கிறது போலத் தெரிகிறது. "தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழமக்களின் நலனைப் பிரதிபலிக்கும் பலம் பொருந்திய அரசியல் - இராணுவ சக்தியாக எழுச்சி பெற்று நிற்பதற்கு பிரபாகரனின் தலைமைத்துவம் தான் காரணம்" என்கிறார். தலைவர் பிரபாகரன் பற்றி குறிப்பிடும் பொழுது:

"முதலாவதாக பிரபாகரனின் ஆளுமையையும் குணாம்சத்தையும் குறிப்பிடவேண்டும். அவர் கட்டுப்பாடுடைய ஒழுக்கசீலர், எளிமையானவர். ஈழத்தமிழ் மக்களின் விடுதலையில் ஆழமான பற்றுறுதி கொண்டவர். அவர் மீது எத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும் அந்த மனிதரிடம் ஒரு உள்ளீட்டான இலட்சிய நெருப்பும் கொள்கை உறுதியும் உண்டு என்பதை மறுக்க முடியாது போர்த்திட்டங்களை வகுப்பதிலும், போர் உத்திகளை அறிமுகம் செய்வதிலும் அவரிடம் இயற்கையாகவே இராணுவத் திறனாற்றல் இருக்கிறது. அவர் அரசியல் சுழியோட்டங்களையும் உன்னிப்பாக அவதானிப்பவர். அரசியல் நிகழ்வுகளை செம்மையாக மதிப்பீடு செய்து, அதற்கேற்ப காய் நகர்த்தும் மதிநுட்பம் உடையவர் .. "

நூலின் இன்னொரு இடத்தில் தலைவர் பிரபாகரன் பற்றிக் குறிப்பிடும் பொழுது, தமிழீழத் தனியரசை உருவாக்கும் பிரபாகரனின் இலட்சிய உறுதியை எவராலும், எப்பொழுதுமே மாற்றமுடியாது என்கிறார் டிக்சிட்.

இது தலைவர் பிரபாகரன் பற்றிய ஒரு சரியான மதிப்பீடு. புலிகள் பற்றி பொய்களும் புனைகதைகளும் செறிந்துகிடக்கும் இந் நூலில் இப்படியான சில உண்மை வரிகளும் இருப்பது திருப்தியைத் தருகிறது. காலம் கடந்தாவது டிக்சிட்டிற்கு இவ்வித ஞானோதயம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. பத்து ஆண்டுகளுக்கு முன்னரே இந்த விழிப்பு அவருக்கு ஏற்பட்டிருந்தால் இந்திய புலிகள் உறவில் விழுந்த பல விரிசல்களையும் முரண்பாடுகளையும் ராஜதந்திர சாணக்கியத்துடன் தவிர்த்திருக்கலாம் அல்லவா?

# களத்திலிருந்து ஒரு குரல்



நேசத்திற்குரிய எமது மக்களுக்கு!

நேற்று வரை என் நினைவுச் சரங்களில் சேர்த்துவைத்தவைகளை கோர்வையாக்கித் தரவிரும்புகின்றேன். உணர்வுகள் அனைத்தையும் ஒருசேரச் சொரிவதென்றால் காகிதம் போதாது. ஆகவே சிறிது சிறிதாகத் தொகுத்துத் தருகிறேன்.

மன்னகுளத்தில் எம் மண்ணின் புதல்வர்கள் புரிந்த மறச்சமர் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நமது போரியல் வரலாற்றில் புதியதோர் தத்துவத்தை அது எமக்குப் புரிய வைத்தது. ஜயசிக்குறுயிற்கு எதிரான எமது முறியடிப்பு வன்மையில் கூட இது ஒரு திருப்புமுனைதான். ஒன்று குவிக்கப்பட்ட ஒட்டுமொத்தவலுவுக்கெதிராய் எம்மவர் காட்டிய திரம் இருக்கிறதே. அற்புதம். அதை விபரிப்பதற்கு எனக்குத்தெரிந்த வகையில் முயற்சிக்கின்றேன்.

அதிகாலை நேரத்திலேயே சாலையோர முன்னணி நிலைகள் மீது எதிரி தாக்கவாரம்பித்தான். சமாந்தரமான ஆட்டிலறி மற்றும் பெரிய, சிறிய மோட்டார்களுடன் தடல்புடலான படையெடுப்பு. ஆதரவுக்கு ராங்குகளும் சீறத்தொடங்க, சம்பிரதாயபூர்வமாக தடைதகர்க்க முன்னே பாய்ந்தது சிங்களப்படை. வேக வேகமாக மோட்டார்களைத் திருப்பி – தொடர்புகளைச் சீர்படுத்தி – முன்னரே ஆயத்தமாக வைத்திருந்த உதவித் துருப்புகளையும் ஒருங்கிணைத்து, வந்தவனை அடி அடியென்று அடித்து, ராங்குகளைச் சேதப்படுத்தி ஆயுதங்களையும் விட்டோட வைத்த திருப்தியில் அப்பாடா என்று போராளிகள் நிமிர்ந்த போதுதான், மன்னகுளப் பகுதியில் ஏற்கெனவே மெல்லப் பதுங்கி – ஊடுருவியிருந்த சிறப்பு ''கொமாண்டோக்கள்'' மாலதி படையணியின் நிலைகள் மீது தாக்கத் தொடங்க, அந்தச் சாதனைச் சமர் உண்மையாகவும் உக்கிரமாகவும் ஆரம்பித்தது.

முகப்பிலே நடந்த சண்டையின் பெறுபேறுகளைக் கூட சரிவரத் தெரிந்து கொள்ளாத நிலையில் பக்கவாட்டில் தீவிர தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் – இடர்பாடுகள் எதிர்கொள்ளப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனாலும் மோர்ட்டார்களை வேகமாக நெறிப்படுத்தி, தொடர்புகளைச் சீர்படுத்தி, பதில் தாக்குதல் தொடங்கியதும் எல்லாம் சமநிலைக்கு வந்தது. ஆனாலும் சண்டையின் தீவிரம் அதிகரித்துக் கொண்டே சென்றது.

சண்டையென்றால் சாதாரண சண்டையல்ல. சாவிற்கும் வாழ்விற்கும் இடையேயான சண்டை! வெற்றிக்கும் தோல்விக்கும் இடையேயான சண்டை! மானத்திற்கும் அவமானத்திற்கும் இடையேயான சண்டை! உரிமைக்கும் உன்மத்தவெறிக்கும் இடையேயான சண்டை! ஆனால், களத்தில் நின்ற ஒவ்வொருவருமே தோல்வியை வெறுத்தோம். விலை என்னவானாலும் வெற்றி ஒன்றே எல்லோரது குறிக்கோளாக இருந்தது. கட்டளை மையத்திலிருந்தும் இதே கருத்து வலியுறுத்தப்பட்டதும் சண்டை தீவிரமடையத் தொடங்கியது.

அங்குலத்திற்கு அங்குலம் எறிகணைகள் வீழ்ந்து வெடித்து எட்டுத்திக்கும் தரையை உழுதுகொண்டுசெல்ல, துப்பாக்கிகளிலிருந்து ஆக்ரோசமாகப் பாய்ந்த குண்டுகள் வேறுபட்ட சுருதிகளுடன் காற்றைக் கிழித்துச்செல்ல, மரங்களில் இலையென்றும் கிளையென்றும் இல்லாது எல்லாமே புழுதிக்காற்றுடன் கதம்பமாகக் கலந்து எங்கும் சிதற – கந்தக நெடிகலந்த காற்று மண்டலத்தின் மேலே சூரியன் மேற்குநோக்கி வேகமாக சரியத் தொடங்கினான்.

வெடிமருந்தின் ஆவேசத்திற்கு ஈடுகொடுக்க முடிந்தாலும் பொழுது கழிந்து கொண்டிருப்பது எமக்கு சாதகமானது அல்ல. மாலை மங்கிவிட்டால் மறுஒழுங்கு செய்ய நேரலாம். எதிரிக்கும் நல்லதொரு அவகாசம் கிடைக்கும். சில நிலைகள் அவன்வசம் வீழ்ந்திருந்த நிலையில் எதிரிக்கு பலம்பெற தருணம் அளிப்பது விவேகமானது அல்ல. அந்த சந்தர்ப்பத்தை அவனுக்கு தரக்கூடாது என்பதில் போராளிகள் உறுதியாய் இருந்தனர். ஆனாலும், எல்லோரும் களைத்திருந்தோம் என்பதையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இந்த சூழ்நிலையில்தான் இறுதிநேர முட்டித்தகர்க்கும் முயற்சி ஆரம்பித்தது.

நிலையைவிட்டு முன்நோக்கியோ அல்லது பின்நோக்கியோ நகரவிரும்பும் எந்தப்படையும் இரண்டு போட்டியாளர்களைச் சந்திக்க நேரும் என்பது போர்விதி. ஒன்று நிலை எடுத்திருக்கும் எதிரி. மற்றது நேரம். ஆம்! தாமதிக்கும் ஒவ்வொரு வினாடிக்கும் இரத்தத்தை விலையாகச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்த நிலையில் வேகமான சிறு அணிகள் களத்தில் இறக்கப்பட்டன. இவர்களின் அடிப்படைத் தகமைகளாக எதிர்பார்க்கப் பட்டவை இரண்டு. ஒன்று, புயலின் வேகம். அடுத்தது. சதுரங்கத்தின் சாமர்த்தியம்.

வளவுக்கு வளவு, வீட்டிற்கு வீடு, அறைக்கு அறை. தெருவுக்குத் தெரு. மரத்துக்கு மரம் என துல்லியமாக வீசப்பட்ட எறிகணைகள் மடியிலே வெடித்ததுபோல் வீழ்ந்து வெடிக்க ஆடிப்போனான் எதிரி. கணை வீச்சினாலேயே உதவிக்கு வந்தவர்களையும் அணைபோட்டுத் தடுத்தனர் எமது மோட்டார் வீரர்கள். மகாபாரதத்தின் சரக்காட்டம் போடுதல் உங்களுக்கு ஞாபகம் வரும் என நினைக்கிறேன். அவ்வளவு நூரம் செறிவானதும் வழுவற்றதுமான கணைவீச்சு; எதிரியை மட்டுமல்ல எங்களையும் பெருமையுடன் வியப்படைய வைத்தது. குழுக்கள் தொடர்பின்றி துண்டறுபட, காயங்களும் சாவுகளும் மனவுறுதியை முற்றிலும் உருவியெடுக்க, உருக்குலைந்த உடல்களைப் பார்த்து பீதிவசப்பட்டவர்களாய் எதிரிகள் செயலிழந்தனர். இதற்கிடையில் எமது பாய்ந்து செல்லும் அணியினர், எதிரி வந்த வழியை இடைவெட்டி மறித்து, சகல நிலைகளையும் பழையபடி கைப்பற்றிவிட, உள்ளே மறிக்கப்பட்டவர்களை அம்போ என்று கைவிட்டுவிட்டு அவசரமாகப் பின்வாங்கியது சிங்களப் பெரும் படை. நிலைமை பூரண கட்டுப்பாட்டில் வரும்போது முற்றிலும் இருட்டிவிட்டது. ஆனால் எங்கள் முகங்கள் அப்போதுதான் புலர ஆரம்பித்திருந்தன. பெரும் தொகை இராணுவ உடலங்கள் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பப்பட்டதையும், கைப்பற்றிய ஆயுதங்களின் விபரப் பட்டியலையும் நீங்கள் படித்திருப்பீர்கள்; அந்தச் சண்டையின் முடிவில் மடிந்து போன எம்வீரர்களின் உடல்களைச் சுமந்த போது உள்ளத்தில் ஏற்பட்டது பூரிப்பா, புளகாங்கிதமா, துக்கமா, சந்தோசமா? சரியாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் கண்கள் கசிந்திருந்தது என்பது மட்டும்உண்மை.

ஆரம்பத்தில் எதிரியிடம் இழந்துவிட்ட ஓரிருநிலைகள் போக எஞ்சிய அத்தனை நிலைகளிலும் அசையாது நின்று – அந்த நாளின் முடிவை வெற்றியை நோக்கித் திருப்பிய மாலதி படையணியைச் சேர்ந்த சகோதரிகளின் வீர உணர்வு மெய்சிலிர்க்க வைத்தது. இராணுவத்தால் சூழப்பட்ட ஒரு நிலையிலே, சகதோழிகள் விழுப்புண்ணடைந்தும், வீரச்சாவடைந்தும் செயலிழந்து விட்ட கட்டத்தில் தனியொருவளாக நின்று கைவசமிருந்த அனைத்து ரவைகளையும் அடித்துத் தீர்த்து- மீண்டும் அந்நிலைகள் எமவசம் வரும்வரை தாக்குப்பிடித்த நீலாம்பரியின் மனவலிமை உங்கள் நினைப்பதில் குறித்துவையுங்கள். வீரத்தின் இலக்கணத்தை புறநானூற்றில் மட்டும் தேடிக்கொண்டிருப்பவர்களிடம் அதனைக் காட்டுங்கள். உச்சி குளிர்ந்து போகட்டும்.

பலம் பார்த்து, தாக்குவதற்கு வாகான வளம்பார்த்து, இடம்பார்த்து, இருட்டான காலம் பார்த்து, கொல்லைப் புறத்தில் கோல் போடும் திருடனைப் போல் மெல்லப்புகுந்து மெல்லியலார் என்று முற்காலத்தில் சொல்லப்பட்ட பெண்புலிச் சகோதரிகளிடம் செம்மையாக வாங்கி – ஓடிய சிப்பாய்கள், பெண்களிடம் தோற்றோமே என்று அவமானமாகக் கருதக்கூடும். ஆனால், என்னிடம் இன்னுமோர் கருத்துமுண்டு. வார்த்தைகளால் மட்டும் வனிதையர்தம் சமத்துவத்தை வலியுறுத்தும் மானுடர்க்கு இது ஒரு நல்ல முன்னோட்டம். முடியுமானால் பின்பற்றிப் பார்க்கட்டும். அடியெடுத்துக் கொடுத்திருக்கும் அண்ணனின் சாதனையில் ஓர் பிடியெடுத்துப்பார்க்கட்டும் திராணியிருந்தால்.

முன்பெல்லாம் என் ஆன்மாவிற்கு வலியெடுக்கும் போது நான் சலித்து விட்டேனோ என்றும் எண்ணுவதுண்டு: ஆனால் உங்களுக்கு எழுத ஆரம்பித்த பின்புதான் புரிந்தது: இது பிரசவவேதனை என்று. இதுபோன்ற வலியெடுத்த இதயங்கள் இங்கே எத்தனையோ இருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் எழுத முடியுமானால் இதுவரை எத்தனையோ வீரகாவியங்கள் எம்மத்தியில் மலர்ந்திருக்கும். ஆனாலும் அவைகளை வெளிக்கொணர ஏதாவது செய்ய வேண்டுமென விரும்புகிறேன்.

மனித வாழ்வின் ஆதார சுருதியே போராட்டம் தான் என நான் நினைக்கிறேன்; சுவாசத்திற்கும் பாலுக்குமான சிசுவின் கதறலில் இருந்தல்லவா அது ஆரம்பிக்கிறது. முயற்சித்துப் பெறாத எதுவுமே சுவையிருப்பதில்லை, சுகமிருப்பதில்லை, சுதந்திரமும் அப்படித்தான் இதை உணர்ந்து கொள்ளும் யாவருக்கும் சிறிய பங்களிப்பையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழுவது இயல்பே. அவ்வாறான உணர்வூட்டம் உள்ளவர்களிடத்தில் ஒன்று சொல்வேன்; இதைவிட தருணம் வேறில்லை!

நிற்க, சமரிலே தோல்வி கண்டது எதிரியின் முன்னணிச் சிறப்புப்படைகள் மட்டுமல்ல, முயற்சியின் விளிம்பில் நின்று முழுமூச்சாய்த் தயாரித்த திட்டமும் தான் என்பதை எதிரி உணர்ந்து கொண்டதால் சிலகாலம் வாலைச்சுருட்டிக்கொண்டிருந்ததை அறிவீர்கள். ஆனாலும் அரசியல் ஆதாயங்கள் வேண்டுமல்லவா? அதற்காக அவன் மீண்டும் வந்தான். அந்தச் சமரையும், புகழ்பூத்த வடமராட்சி கடல் சமரையும் ஜெயசிக்குறுயில் நாம் கொடுத்த அடியையும் பற்றி அடுத்தமுறை விரித்துரைக்கிறேன் இப்போதைக்கு முடித்துவைக்கிறேன். ○

– நிலைகளுக்குப் பின்னிருந்து ஒரு நேச நெஞ்சம்.

# நில அபகரிப்பிற்காக கிராமப்படுகொலைகள்

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகமம் பகுதி மீண்டுமொரு கிராமப்படு கொலையைச் சந்தித்துவிட்டது. சிங்களத்தின் காவல்துறையால் இப்படுகொலை சட்ட பூர்வமாக நடாத்தப்பட்டுள்ளது. இதில் எட்டுத் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 17பேர் படுகாயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் நால்வர் பாடசாலை மாணவர்கள்.

முன்பெல்லாம் சிங்களக்காடையர் மற்றும் ஊர்காவற்படையினரின் தலைமையில்தான் - பெரும்பாலும் - தமிழர் கிராமப் படுகொலைகள் நிகழும். அந்த இனக்கொலையை தமிழ் - சிங்கள கலவரம் என்று பெயர் சூட்டியும் - காடையரின் தாக்குதல் என்று திரிபுபடுத்தியும் இனக்கொலைப்பரிமாணத்தை சிங்கள அரசு மூடி மறைக்கும்.

ஆனால், தமிழர் படுகொலைகளுக்கு எதிர்விளைவாக நடந்த பதிலடிகளால் மிரண்ட சிங்களக்குடியேற்றவாசிகள் இப்போது, தமது கொலைவெறியை சற்று அடக்கியே வாசிக்கின்றனர். இதனால் அந்தக் கொலைப் பணியை, இப்போது சிங்களப் பொலிசார் தமது கைகளில் எடுத்துள்ளனர்.



அம்பாறை மாவட்டத்திலும் - திருகோணமலை மாவட்டத்திலும் தமிழர்கிராமப் படுகொலைகளை சிங்களப் பொலிசாரே முன்னின்று நடாத்துகின்றனர்.

பல படுகொலைகளைக் கண்டுவிட்ட அம்பாறை சென்றல்காம்ப் கிராமம், அண்மையில் சிங்களப்பொலிசாரால் மீண்டும் தாக்கப்பட்டதும் அது நடந்து ஒருசில மாத இடைவெளியில், இப்போது தம்பலகமமும் சிங்களப்பொலிசாரினால் தாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கிராமப்படுகொலைகளுக்கான தமிழர் கிராமங்களை, பேரினவாதிகள் திட்டமிட்டுத் தேர்ந்தெடுக்கின்றனர்.

குறித்த கிராமங்களைவிட்டு தமிழ்மக்களை நிரந்தரமாக விரட்டியடிக்க வேண்டும் என்பதே தாக்குதல்களின் உடனடி இலக்கு. தமிழர்நிலங்களை சிங்களமயமாக்கும் பேரினவாதத்தின் முயற்சிக்கு இந்தத் தமிழ்க் கிராமங்கள் தடையாக இருப்பதால் அந்தத் தடைகளை அகற்ற கிராமப்படுகொலைகளை ஒரு வழியாக பேரினவாதிகள் கடைப்பிடிக்கின்றனர்.

தமது கிராமங்களை விட்டு தமிழ்மக்கள் ஓடியதும் அதை ஆக்கிரமித்து - அந்த நிலப்பகுதியை அருகிலுள்ள சிங்களக்குடியேற்றத்துடன் இணைத்து நில அபகரிப்பை விரிவாக்குவது பேரினவாதம் கடைப்பிடிக்கும் ஒரு தந்திரமாகும். தென் தமிழீழத்தின் கணிசமான பகுதி நிலம் சிங்களக் குடியேற்றங்களினாலும் - கிராம அபகரிப்புகளாலும் விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆறு பெரிய சிங்களக்குடியேற்றங்களால் திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்முகம் சிதைக்கப்பட்டுள்ளது.

1. அல்லை - கந்தளாய்
2. கல்மெட்டியாவெவ [கல்முட்டியான்குளம்]
3. வான்வெவ [வானாறு]
4. பதவியா [பதவில் குளம்]
5. மொரவேவ [முதலிக்குளம்]
6. மகாதிவுல்வெவ [பெரியவிளாங்குளம்]

தமிழ் அடையாளங்களை அப்படியே மொழிமாற்றம் செய்து-சிங்களவர் பகுதியாக்கிய நிலக்கொள்ளையை சிங்கள ஆட்சியாளர்கள் செய்து வருகின்றனர்.

சுதந்திரப்பொன்விழாக்காணும் பேரினவாத அரசு, தான் செய்த 50 வருடச்சாதனையாக இந்த நில அபகரிப்பை நிச்சயம் அது கொண்டாடும். தென் தமிழீழத்தின் இனவிதாசாரத்தையே இந்த நில அபகரிப்பு தலைகீழாக மாற்றிவிட்டது. இந்த ஆபத்திற்குள் சிக்கிக்கொண்ட முக்கிய மாவட்டங்களாக அம்பாறையும் - திருகோணமலையும் விளங்குகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் நாலில்மூன்று பங்கு நிலம் சிங்களமயப்படுத்தப்பட்டுவிட்டது. மிகுதியையும் அபகரிக்கும் நாசகார நோக்கத்தை நிறைவேற்ற பேரினவாதம் பெருமுயற்சி எடுத்துவருகின்றது.

இதுபோல, 1010 ச. மைல் பரப்பளவைக்கொண்ட திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 650 ச மைல் பரப்பளவு நிலம் சிங்களவர் பூமியாக மாற்றப்பட்ட அநியாயம் நிகழ்ந்துள்ளது. இதில் 574 ச மைல் நிலத்தை புதிதாக உருவாக்கப்பட்ட சேருவில சிங்களத்தொகுதி விழுங்கியுள்ளது. திருகோணமலைத்தொகுதி 216 ச. மைல்களையும் - மூதூர்த்தொகுதி 170 ச. மைல்களையும் கொண்டமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

1921 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசனக்கணக்கெடுப்பின்படி திருகோணமலையின் மொத்த சனத்தொகையில் 4 வீதமாக இருந்த சிங்களவர் - 1981ஆம் ஆண்டு 35 வீதமாக உயர்ந்தனர்.

இனக்கொலைத்தாக்குதலின் கொடூரத்தால் நடந்த தமிழரின் இடப்பெயர்வு காரணமாக - திருகோணமலையில் - சிங்களவர் விதாசாரம் இப்போது 50 வீதத்தையும் தாண்டிவிட்டது. இத்துடன் சுமார் 65 வீதமான நிலத்தையும் அபகரித்து திருகோணமலை மாவட்டத்தின் ஆதிக்கசக்திகளாக - சிங்களவர் - ஆகிவருகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக்குடியேற்றத்தால் அச்சுறுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் ஒருபகுதிதான் தம்பலகமம்.

1968 ஆம் ஆண்டு தம்பலகமத்தின் வடபகுதியில் சிங்களக் குடியேற்றம் ஒன்று அமைக்கப்பட்டது. கல்முட்டியான்குளம் என்ற தமிழர்பகுதி கல்மெட்டியாவெவ என்ற பெயர்மாற்றம் செய்யப்பட்டு - சிங்களவர் குடியேற்றப்பட்டனர். இதுகாரணமாக தம்பலகமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் இனவிதாசாரம் மாற்றியமைக்கப்பட்டது.

1921 ஆம் ஆண்டு தம்பலகமம் வடக்கு பிரதேசத்தின் மொத்த சனத்தொகையான 741 பேரில் 17 பேரே சிங்களவர். (மூன்றுபேர் முஸ்லிம்கள்) ஆனால், கல்முட்டியாவெவ குடியேற்றம் நடைபெற்ற எட்டுவருடங்களின்பின் - 1976இல் தம்பலகமம் வடபகுதியில் தமிழர்தொகை 3232 ஆக இருக்க, சிங்களவர் தொகை 2774 பேராக வீங்கியது.

திருகோணமலை மாவட்டத்திலிருந்து 1971ஆம் ஆண்டு சேருவில என்ற சிங்களத்தொகுதிக்காக தமிழர்நிலம் வெட்டியெடுக்கப்பட்டது. அப்போது, கண்டி - திருமலை வீதிக்கு கிழக்கே உள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய தம்பலகமம் உதவி அரசாங்க அதிபர் பிரதேசங்கள் சேருவில தொகுதிக்கு தாரைவார்க்கப்பட்டன.

இப்போது, தமிழர்கள் வாழும் எஞ்சிய தம்பலகமம் பகுதிக் கிராமங்களை அபகரிக்க பேரினவாதம் எத்தனிக்கின்றது. போர் தொடங்கியபின் அதைச்சாட்டாகவைத்து 1990 பிற்பகுதியில் தம்பலகமம் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள அனைத்துத் தமிழர் கிராமங்களும் இனக்கொலைத்தாக்குதலுக்கு உள்ளாகின. இதனால், மாபெரும் இடப்பெயர்வு அங்கே நிகழ்ந்தது. பெருமளவு மக்கள் வடபுலம் நோக்கி ஓடிவந்தனர். எஞ்சியோர், அங்கே, அகதிமுகாங்களில் தஞ்சமடைந்தனர். ஆயினும் இடம்பெயர்ந்தோரில் கணிசமானபகுதியினர் மீளவும் தமது கிராமங்களில் குடியேறினர். அவ்விதம் மீளக்குடியமர்ந்த தம்பலகமம் பகுதியின் புதுக்குடியிருப்பு - பொற்கேணி கிராமங்களே 01.02.98 அன்று சிங்களப் பொலிசாரின் தாக்குதலுக்குள்ளாகின.

1985 இல் பாலம்போட்டாறு தமிழ்க்கிராமம் தாக்கப்பட்டது. இப்போது, ஜெயபுர என்ற பெயருடன் அது சிங்களவர் கிராமமாகிவிட்டது.

பன்குளம் - முதலிக்குளம் என்பன 1977 இலும் பின்னர் 1982 இலும் தாக்கப்பட்டன. அங்கிருந்து தமிழ்மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். முதலிக்குளம் மொறவேவ ஆனது. பன்குளம் காடாகியது.

1984ஆம் ஆண்டு தென்னமரவடி - கனுகேணி கிராமங்கள் 24 மணிநேர அவகாசத்திற்குள் எழுப்பிக்கலைக்கப்பட்டன. இப்போது அந்தக்கிராமங்கள் வடக்கு - கிழக்கு நிலத்தொடர்பைத் துண்டிக்கும் இராணுவ வலயமாகிவிட்டன.

ஈழத்தமிழரின் தேசியத்திற்கு அவர்களின் தாயக நிலமே ஆதாரதூணாக விளங்குகின்றது. இந்த தாயக நிலத்தைப்பறித்து தமிழினத்தின் தேசிய இன அந்தஸ்தை அழிப்பதே இந்த நில அபகரிப்பின் அரசியல் நோக்கமாகும்.

படைபலத்தால் தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து - சிங்களவர்களைக் குடியமர்த்தி - நில அபகரிப்புச் செய்ய சிங்கள அரசு முயலலாம். ஆனால், அந்த நில அபகரிப்பை - அத்துமீறிய சிங்களக்குடியேற்றங்களை, புலிகள் இயக்கம் என்றுமே அனுமதிக்கமாட்டாது. Q

## கடற்கரைக் காட்சி அல்லது போர்க்காட்சி

கடுங்காற்றின் உந்துதலில்
கொந்தளித்துத் திமிறி ஆர்ப்பரிக்கும் கடல்.

கரைகரையாய்க் கைப்பற்றி
தரைமுழுதும்
இந்தா விழுங்குகிறேன்
என்கின்ற தோரணையில்,
தாவித்தாவி
கொழுத்த பெருஞ் சிங்கமென
கர்ஜிக்கும் அது.

அணியணியாய்த் திரண்டெழுந்து
சீறிப்பறந்து
பாறைக்கரைகளில் மோதிச் சிதறி
நுரைகக்கி மறையும் அலைப்படைகள்.

ஓயாதிரைச்சலிடும்
கடுங்காற்றின் முடுக்குதலில்,
மீளவும் மீளவும்
அலைகளின் வெறிப்பாய்ச்சல்,
சின்னாபின்னம்,
பின் வாங்கல்.

அலைகளால் மோதுண்டு
சிறிது சிறிதாய்
அரியுண்டு தேயுறினும்
அணையென நீண்டு
ஆர்ப்பாட்டமின்றித் தனித்து
பெரிய கருங்கடலை
எதிர்கொண்டு நிற்கும் கரை. O

இளந்திரையன்

# கிளிநொச்சி தாக்குதல்: வெட்டியெடுக்கப்பட்ட 'கேக்' துண்டு



ஆனையிறவு-பரந்தன் - கிளிநொச்சி இராணுவ கூட்டுத் தளம் மீண்டுமொருமுறை புலிகளின் பெருந்தாக்குதலுக்கு உட்பட்டுள்ளது. 1-2-98 அன்றைய தாக்குதலின் போது கிளிநொச்சி படையினரின் முன்னரங்கப் பகுதிகளை உடைத்தெறிந்து புகுந்த புலிகள், நகரின் மையப் பகுதிவரை முன்னேறி - குறித்தளவு நிலத்தையும் மீட்டெடுத்துள்ளனர்.

இந்த நில மீட்பு விடயத்தை இன்றுவரை படைத்தலைமை ஏற்க மறுக்கின்றது. ஆனால் இந்த உண்மைக்கும் அப்பால் கிளிநொச்சி பகுதியும் - பரந்தன் பகுதியும் புலிகளிடம் வீழ்ந்துவிட்டது என்ற வதந்தி தென்னிலங்கையில் பரவியது. இந்த வதந்தியை மறுப்பதற்காக தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களை களமுனைக்கு அழைத்து வரவேண்டிய நிர்ப்பந்தம் படைத் தலைமைக்கு எழுந்தது. பரந்தனும் - கரடிப்போக்கும் படையினரின் பிடியிலேயே தொடர்ந்து உள்ளது ஆனால், கிளிநொச்சி நகரின் மையம் புலிகளின் கைகளிலேயே உள்ளது என்ற உண்மையை பத்திரிகையாளர்கள் அம்பலப்படுத்தினர்.

தாக்குதலுக்கு முன்னர் படையினர் நிலைகொண்டிருந்த டிப்போ சந்திப்பகுதியில் இருந்து சுமார் 2கி.மீ. தூரம் பின்வாங்கி, இப்போது கிளிநொச்சி வைத்தியசாலைப் பகுதியை முன்னரங்காக்கி படையினர் அரணமைத்து நிலை கொண்டுள்ளனர்.

டிப்போ சந்தியில் இராணுவம் குடிகொண்டிருந்த காலத்தில் அங்கிருந்து சுமார் 3கி.மீ. முன்னாலிருந்த தொலைத் தொடர்புக் கோபுரம் பகுதி வரை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியாகவே இருந்தது.

இந்தவகையில், இராணுவம் நிலைகொண்டிருந்த கிளிநொச்சி பகுதியில் 2 கி. மீ. நீள நிலப்பகுதி அன்றைய பெருந்தாக்குதலில் மீட்கப்பட்டுள்ளது என்றாலும், உண்மையில், மொத்தம் 5 கி.மீ. நீள நிலப்பகுதி அத்தாக்குதலின்பின் புலிகளின்கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. இதனால் ஜயசிக்குறுய் படையினர் நகரவேண்டிய தூரம் மேலும் 5 கி. மீற்றர்களினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்றைய களநிலவரத்தைப் பொறுத்தவகையில் 5 கி. மீ. தூரத்தைக் கைப்பற்றி - நிலைகொள்வதென்பது ஒரு பற்றாலியனை இழந்தாவது சாதிக்கக் கூடியதொன்றா! என்ற கேள்வி எழுவது இயல்பானதே.

1. 2. 98 அன்றைய பெருந்தாக்குதலையும் - அடுத்து சில நாட்கள் தொடர்ந்த நேரடிச் சண்டைகளுக்கும் பின்னர், புலிகள் தங்களது முன்னரங்கப் பாதுகாப்பு அரண்களை படையினரின் தற்போதைய முன்னரங்க நிலைகளுக்கு (வைத்தியசாலைப்பகுதி) மிக அருகில் அமைத்துள்ளனர்.

புலிகள் கைப்பற்றிய கிளிநொச்சி பகுதியை மீண்டும் கைப்பற்றிவிட பத்துத் தடவைகளுக்கும் மேல் படையினர் முயற்சி எடுத்திருந்தனர். ஒரு நாளில் மட்டும் ஐந்து தடவைகள் முயன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும், அவர்களது அனைத்துமுயற்சிகளும் புலிகளின் தீவிரமான எதிர்த் தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டன.

பின்புலமாக ஒரு பாரிய இராணுவதளத்தைக கொண்டிருந்த போதும், இழந்த 2 கி.மீ. நீள நிலப்பகுதியை மீண்டும் கைப்பற்றமுடியாதுபோனது, ஒரு புதிய இராணுவயதார்த்தத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அதாவது, இனிமேல், புலிகளின எதிர்ப்புகளைமுறியடித் →



கைப்பற்றப்பட்ட முன்னரங்கப் பகுதி:
முற்றத்தில் வந்து மண்வேலியிட்ட சிங்களத்தின் மண்டைக்கனமிறங்க உச்சி பிடித்துலுக்கியது தமிழர்சேனை.

துக்கொண்டு - முன்னேறி ஒவ்வொரு அங்குல நிலத்தையும் ஆக்கிரமிப்பது என்பது சாதாரணவிடயமல்ல என்பதையும்- அதற்காக பலியிடப்போகும் படையினரின் எண்ணிக்கையும் - சாதாரணமாக இருக்க மாட்டாது என்பதையும் இந்தப்புதிய இராணுவயதார்த்தம் படைத்தலைமைக்கு உணர்த்தியிருக்கும்.

இந்தப் புதிய இராணுவ பரிமாணத்தைத்தான் மாங்குளம் சண்டைமுனையிலும் படையினர் எதிர்கொள்கின்றனர்.

புலிகள் பயன்படுத்தும் பெருந்தொகையான எறிகணைகளும்- அவை வெகுதுல்லியமாக எதிரி இலக்குகளை தாக்குவதும்- மற்றும் மரபுப்போர்முறையில் புலிவீரர்கள் பெற்றுள்ள சண்டைத்திறனில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும் மேற்குறித்த புதிய இராணுவ பரிமாணத்திற்கு அடிப்படைக் காரணிகளாக உள்ளன. இந்த இராணுவ அம்சங்கள் காரணமாக முன்னெப்போதும் இல்லாதவகையில், இப்போது படையினர் - நேரடிச்சண்டைகளில் பெரியளவில் உயிரிழப்புக்களைச் சந்திக்கின்றனர்.

சிங்களத்துப்படைகளுக்கு எதிராக தமிழர்சேனை பெற்றுள்ள இந்த மகிழ்ச்சி தரக்கூடிய மரபுப்போர்ப்பலம் தலைவர் பிரபாகரனின் அயராத முயற்சியாலும் - அவரது இராணுவ நிபுணத்துவத்தினாலும் - அவர் வரைந்து நடைமுறைப்படுத்தும் புதிய, புதிய தாக்குதல் தந்திரோபாயங்களினாலும் பெறப்பட்டுள்ளன.

மாங்குளம் முனையிலும் சரி - கிளிநொச்சி முனையிலும் சரி ஜயசிக்குறுய் படையினரின் நகர்வு நடவடிக்கைகள் ஒருவித ஸ்தம்பிதநிலையை அடைந்துள்ளன. ஆயினும், இந்த இயலாமை நிலையை மறைத்து - அதை நியாயப்படுத்துவதற்காக புதிய, புதிய - இராணுவ தந்திரோபாயச் சொற்களை சிங்கள இராணுவவாதிகள் பயன்படுத்துகின்றனர்.

''மெதுவான நகர்வுமுறை'' என்றும் - ''ஊர்ந்து நகர்ந்து கைப்பற்றல்'' என்றும் - ''தகுந்த நேரத்திற்காகக் காத்திருக்கின்றோம்'' என்றும் சிங்களப்படையின் இயலாமைக்கு, இராணுவவிளக்கம் அளிக்கப்படுகின்றது.


ஆனால், உண்மையில், ஜயசிக்குறுயின் சமர்த்தந்திரமாக வேகமான நகர்வும் -விரைவான படைநகர்த்தலுமே இருந்தன. ரத்வத்தவின் புகழ்வாய்ந்த காலக்கெடுக்கள் இந்த உண்மையை நிரூபிக்கப்போதுமானவை. ரத்வத்த - தளுவத்த குழுவினரின் இராணுவஆசை ஈடேறவில்லை என்பதை களநிலவரம் நிரூபித்துவிட்டது. இராணுவத்தின் திட்டப்படி, இப்போது ஜயசிக்குறுய் நகரவில்லை. இதனாலேயே நகர்வுத்தந்திரோபாயச் சொற்பதங்களை துணைக்கிழுத்து சிங்களத்தின் இராணுவ இயலாமையை மூடிமறைக்க முயல்வதுடன் தனது திட்டப்படியே படைநகர்வு நடைபெறுவதாக படைத் தலைமை பாவனை செய்ய விரும்புகின்றது.

தனது இராணுவத்தளங்களின் எல்லைகளை படிப்படியாக விரிவாக்கிக் கொண்டு செல்வதுதான் சிங்களத்தின் இராணுவ இயல்பு.

இதேவேளை, பாரிய இராணுவத் தளங்களின் ஒரு பகுதி மீது - புலிகள் தாக்குதலை நடாத்தினால் படையாட்களைக் கொன்று - ஆயுதங்களைக் கைப்பற்றுவது அல்லது அழிப்பதுடன் தாக்குதல் நடாத்திய பகுதியை விட்டு பின்வாங்கி விடுவது புலிகளின் பொதுவான வழமையாக இருந்தது.

ஆனால், ஆனையிறவு -பரந்தன் -கிளிநொச்சி இராணுவக் கூட்டுத்தளம் மீதான இத்தாக்குதலின் போது புலிகள் தங்களது வழமையை மாற்றி - கைப்பற்றிய பகுதியிலும் நிரந்தரமாக நிலைகொள்ள முயன்றனர்.

தனது தளங்களின் எல்லைகளை விஸ்தரிப்பதையே இலட்சியமாகக் கொண்ட படைத்தலைமைக்கு -தனது தளமொன்றின் ஒரு பகுதியை கைப்பற்றிய புலிகள், அங்கே தொடர்ந்தும் நிலை கொண்டதை ஜீரணிக்க முடியவில்லை. இதை ஒரு இராணுவச் சவாலாக சிங்களம் எடுத்தது. இராணுவத்தின் கௌரவப் பிரச்சனையாகவும் அது மாறியது. புலிகள் விடுத்த இராணுவச்சவாலை வெற்றி கொள்ள குடாநாட்டு இராணுவத்தலைமையும் -ஆனையிறவு கூட்டுத்தள படையினரும் கூட்டாக முயன்றனர். ஆனால் அனைத்து முயற்சிகளிலும் படையினர் தோற்றனர். இறுதியில், கைப்பற்றிய பகுதியில் நிலைகொள்வது என்று புலிகள் எடுத்த முடிவை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி, ஒரு புதிய இராணுவ சாதனையை, புலிகள் நிலைநாட்டியுள்ளனர். ○




# மீட்சி

வீம்பு பெருகப் பெருக
நிலம் விழுங்கி நீண்டது சிங்களம்.
நெஞ்சிலேறி மிதித்து
முகத்தில் மண்வேலியிட்டது.
மண்ணணைக்குள் உயிரொளித்து
சாவைத் துரத்தும் கனவை நெய்தது.

சாவைத் தொலைத்த பிறவிகள்
போரேரிறக்கி மண்ணணை உழுதன.
சாவை விதைத்து
சிறுவை தந்த உயிர்களைக் கொய்தன.

நிலம் செரிக்காது
குடல் பொருமிற்று.
நிலைகொள்ளா அவஸ்தையில்
விழுங்கிய நிலம் துப்பி
சிங்களத்தின் வீம்பு உள்ளொடுங்கியது.

மண் செழிக்க முளைத்த பிள்ளைகள்
தன் தேகமேறித் திரியவும்
கல்லாய்ச் சமைந்த பூமி கனிந்தது.
மூச்செறிந்து அவர்கள் தேகம் வருடியது.
பச்சையம் கொழிக்கும் கைகளால்
பரிவு ததும்ப நிழல்விரித்துத் தாலாட்டியது.
மடியணைத்து -
நெஞ்சிருந்து நீர்சுரந்து வேர் நனைத்தது.
மடிச்சூட்டில் இறங்கி
மூலை சுவ்விப் பாலுறுஞ்சும் பரவசமூட்டி
தாயென நெக்குருகியது. ○

எஸ். உமாஜிப்ரான்

# இதுதான்: இப்படித்தான் எங்களுக்குள்ளேயும் கோபம் எரிகிறது.

தலதா மாளிகை.
வெறும் கல்லாலும் மண்ணாலுமான கட்டிடமல்ல.
ஒரு இனத்தினதும், மதத்தினதும்
உயிரும், உணர்வும் கலந்த உயிர்க்கூடு.
சிங்களச் சிரசின் சொர்ணமுடி.
புத்தமதத்தின் பொற்கோவில்.
பட்டத்துயானையே பணிந்தேற்றும் பாதக்கமலம்.
சிங்கபுரியைச் சிங்களர் ஆண்டாரென்பதைக்
காலம் காலமாகக் கட்டியம்கூறும் தந்தமாளிகை.
பௌத்தனொருவன் தன்னுயிரினும் மேலாகப்
பாதுகாக்க நினைக்கும் புதையற் பொக்கிஷம்.
வெளிச்சுவரில் சின்ன வெடிப்பேற்பட்டாலே...
அழிவு வந்துறுமெனப் பதறும்
நம்பிக்கையின் தூலவடிவம்.
சிங்கள மன்னர்கள் சிம்மாசனமேறியதும்
சந்திரவட்டக் கற்களில் தலைசாய்த்து நிற்பர்,
அந்தளவு பிணைப்பு.
உள்ளே புகும்போதில் பௌத்தனொருவனுக்கு
நரம்புகளூடே ஒளியூறி உயிர்கிறங்கும்.
மகாவம்சத்தின் மந்திரக்கோவில்.
கண்டிக்கு வனப்பூட்டும் கலைக்கூடம்.
யாரெனினும் பணிந்தேற்றக்கூடிய
பேரெழிற்புரம்.
சிங்கள இனத்தின் சொர்ப்பன மாளிகை மீதுதான்
எங்கிருந்தோ வந்திடித்தது இடியன்.
உள்ளே வெடிசுமந்த லொறி வெடித்ததும்
வெள்ளைமண்டபம் விதிர்விதிர்த்துப் போனதாம்.
உலகம் ஒரு கணம் இருண்டதாம்.
உயிர்மீது எவர்வந்து இடித்தார்களென்று
''சித்தார்த்த கூடம்'' தினறியதாம்.
உடலைக்கிழித்து உள்ளே கைவிட்டு
இதயத்தைப் பிடித்து நசித்தது எவர் கைகள்?
அத்தாணி மண்டபத்து அழகிய தூண்களை
அடித்து நொருக்கியது யார்?
பொன்னோடு வேய்ந்த புனிதத்தின் வாழ்விடத்தில்
கண்வைத்திடித்தவர் எவர்?
''தர்மம்'' வந்திடித்ததெனிலும் தண்டிப்போம்.
''வினைப்பயனே'' வெடிசுமந்து வந்ததெனிலும்
கண்டிக்கவேண்டிய கைங்கரியமென்று
தமிழர்களைத் தாக்கியது ''சாந்தமார்க்கம்.''
புலிகள்மீது மீண்டுமொரு பழி.
பழிசுமக்கவே பிறந்தவரானார்கள் புலிகள்.
மேட்டுக்குடியின் மூந்தானை சரிந்ததென்று
சிங்களத்துக்குக் கோபம் சிரசிலடிக்கிறது.
இந்த நிலத்தின் சொந்தங்கள் மீது




— வியாசன்

வந்தகுடிகள் வல்லமை காட்டுவதா? என்று
அஸ்கிரிய பீடத்துக்கு ஆத்திரம்.
எல்லாளன் இன்றுமிருக்கின்றான் என்பதறிந்து
இல்லாமற் செய்வேனென எழுகிறது மல்வத்தபீடம்.
தலதாமாளிகையை இடித்தது யாரென்று
எவருக்கும் தெரியாது.
சரி,தமிழனே செய்தானென்று
வெறும் ஒப்புக்கொருமுறை ஏற்றுக்கொண்டு
சரி, பிழையைத் தராசிலிடுவோம்.
எந்தத் தட்டுத் தாழுமோ
அந்தத் தட்டில் தர்மம்.
வெள்ளையனிடமிருந்து விடுதலை பெற்று
சிங்கள இனத்துக்கு ஐம்பது வருடங்களாகின்றன.
பொன்விழாக் காலம் புலர்ந்ததும்
பொன்விழாவை கண்டியில் கொண்டாடென்று
''சிமாட்டிக்குச்''சொல்லியவன் எவன்?
அவனே குண்டுவெடிப்பின் ஆணிவேர்.
பரம்பரை ராசதானியின் பஞ்சுக்கதிரையிருந்து
எண்கோணமண்டப எழிற்பீடமமர்ந்து
தமிழர்களை வெற்றி கொண்ட சங்கதியை
நாட்டுக்குச் சொல்ல ''நாச்சியார்'' நினைத்தார்.
கூட்டையுடைத் துருவியது குண்டுப்பறவை.
வெளிச்சமானது விடயம்.
அம்மையே குண்டுவெடிப்பின் அடிநாதம்,
''பொன்விழாவுக்கு முன்னர் போரிட்டு வெல்வேன்''
வன்னி பிடிப்பேன்,
கண்டிவீதி என்ராஜஉலா காணும்.
யாழ்ப்பாணத்திலிருந்து தமிழனை ஏற்றிவரும் வாகனத்தை
பொன்விழாவில் வரவேற்பேன்.
பிரபாகரனா யாரவன்?
பொடியன்.
வென்றபின் அவனுக்கும் கைகுலுக்கிவிடுவேன்.
என்று சொன்னவர் எவர்?
சிங்களப் படைகளின் சேனாதிபதி.
பிரசண்ட ராஜமார்த்தாண்டன்.
''ராஜினாமாத்திலகம்'' ரத்வத்த.
வெளிச்சமானது விடயம்.
கண்டி வெடிப்புக்குக் காரணமே இவர்தான்.
தலதாமாளிகையை இடித்தது யாரென்று
எவருக்கும் தெரியாது.
எனினும் எங்களையும் கொஞ்சம் பேசவிடுங்கள்.
பிணம் தின்னும் பேயரசின் கோபுரவாசலுள்ள
ஆராச்சி மணிகளுக்கு ஒரு கேள்வி,
குண்டு வெடித்ததைக் கண்டிக்கின்றவர்களுக்கு
ஒரு அண்டுக்கடிதம்.
தலதாமாளிகையின் சுவரில் ஒரு கீறல் விழுந்ததுக்கு
இத்தனை கோபப்படும் இரட்சகர்களே!
மனிதம் மனிதமென்று மாரடிக்கின்ற புனிதர்களே!
சிங்களத்தின் தலையில் இடியிறங்கியதும்,
உங்களுக்கு கோபம் வருகின்றதல்லவா?
இதுதான்! இப்படித்தான்.
எங்களுக்குள்ளேயும் கோபம் எரிந்தது.
எப்போது?
நவாலி சென்பீற்றர் தேவாலயத்தில்
கூடுகலைந்த குருவிகள் ஓடிவந்து குடியிருந்தபோது
குண்டு போட்டாயே! அப்போது.
பூவும், பிஞ்சும், காயும், கனியுமாக
முழுமரத்தையே உலுப்பிச் சரித்தாயே! அப்போது.
நாகர்கோவிலில் ஒரு நாள்
வெள்ளைவெளேரெனக் கள்ளமில்லாத குஞ்சுகள்
பள்ளிப்பாடங்கள் படித்துக் கொண்டிருந்தபோது
குண்டெறிந்து கொன்றாயே! அப்போது.
புழுபோற் துடிக்கத் துடிக்கப் புதைத்தாயே! அப்போது.
ஒவ்வொரு நாளும்,
ஒவ்வொரு நொடியும்
எத்தனை வீடுகளை எரிக்கின்றாய்.
எத்தனை கோவில்களை இடிக்கின்றாய்.
எத்தனை உயிர்களை எடுக்கின்றாய்.
இனத்தின் அடையாளங்கள் ஒவ்வொன்றையும்
நுந்தியெடுத்து உருக்குலைக்கின்றாயே.
இதுதான்! இப்படித்தான்
எங்களுக்குள்ளேயும் கோபம் எரிகிறது.
தோன்றாப் பொருளாய் எம்மிற்கலக்கும்
மாவீரர் துயிலுமில்லத்தைத் துளைத்தபோதும்,
வானமரர் எனநாம் வணங்கும் மறவர்கள்
தூங்குமிடம் உழுது தொலைத்தபோதும்,
கண்மணிகள் நிம்மதி கலைத்த நிமிடமும்,
புதியபரபொன்றின் புனிதர்களின்
நினைவிடங்களை அழித்தநேரத்திலும்
இப்படித்தான் எங்களுக்குள்ளும்
கோபம் கொப்பளித்தது.
புத்தபெருமானைப் பேசவிடுங்கள்.
சித்தார்த்தனுக்கு எல்லாம் தெரியும். ○